பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 21 ஞாயிற்றுக்கிழமை (03.04.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 105

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION
பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN
COM NET
T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்



## கொக்குவிலில் நேற்று விபத்து இளம்பெண் தலைசிதறிப் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்துசென்ற இளம் பெண், சைக்கிள் நிலை தடுமாறியதனால் கீழே விழுந்து ஹண்டர் வாகனத்துக்குள் அகப்பட்டு தலை சிதறி ஸ்தலத்தில் துடிதுடித்து பலியானார்.

இத் துயரச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3.40 மணியளவில் கே.கே.எஸ். வீதியில் கொக்குவில் பூநாறி மரத்தடியில் இடம்பெற்றது.

சம்பவத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த கமலநாதன் கலைச்செல்வி (வயது 22) என்ற பெண்ணே உயிரிழந்தவர் ஆவார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தனது பெரிய தாயாரைப் பார்ப்பதற்காக கொடிகாமத்திலிருந்து சுன்னாகம் சென்று, பெரிய தாயாரின் வீட்டிலிருந்து யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு வந்துகொண்டிருக்கும்போதே இத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிள் நிலை தடுமாறியதனால் பின்னால் அமர்ந்திருந்த பிரஸ்தாபப் பெண் தடுமாறி கீழே வீதியில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் நிழல் யுத்தம் தொடர்ந்தால்

# நிஜ யுத்தத்தை எவரும் தடுக்க முடியாது!

## விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் மக்களுக்கும் எதிரான சிங்கள அரசின் நிழல் யுத்தம் தொடருமானால் நிஜ யுத்தம் ஏற்படுவதை எவருமே தடுக்க முடியாது போய்விடும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான "விடுதலைப் புலிகள்" இதழில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க எம்.பி. டன்னிடேவிஸ் நேற்று கிளிநொச்சி விஜயம்!

(கிளிநொச்சி)

அமெரிக்காவின் சிக்காக்கோவின் ஜனநாயக கட்சி பாராளுமன்ற உறுப்பினரான டன்னிடேவிஸ் என்பவரும் அவரின் சேவைகள் பணிப்பாளர் டன்னி எவ். கன்ட்ரெல் என்பவர் நேற்று கிளிநொச்சியிலுள்ள புலிகளின் அரசியல்துறை பணியகத்திற்கு விஜயம் செய்து காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

ஒரு மணிநேரமாக இடம்பெற்ற இக் கலந்துரையாடலின்போது ஜனநாயக கட்சி எம்.பி. தான் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் பெரும் களேபரம் தடியடி; கண்ணீர் புகைக்குண்டு வீச்சு

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நேற்று பிற்பகல் பாடசாலை மாணவி மீது படையினரின் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து அப்பகுதியில் திரண்ட பொதுமக்களுக்கும் படையினருக்கும்


சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுசிந்தா (வயது 16) என்ற மாணவியே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக



ஜனநாயக கட்சி எம்.பி. தான் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சாவகச்சேரியில் பெரும் களேபரம் தடியடி; கண்ணீர் புகைக்குண்டு வீச்சு



(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் நேற்று பிற்பகல் பாடசாலை மாணவி மீது படையினரின் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து அப்பகுதியில் திரண்ட பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டு, இறுதியில் பெரும் களேபரம் வெடித்தது.

சாவகச்சேரி புளியடிச் சந்தியில் பாடசாலை மாணவி வீதியைக் கடக்க முற்படுகையில் இரா ணுவ மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார்.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த விஜய குமார் சுசிந்தா (வயது 16) என்ற மாணவியே படு காயமடைந்தவர் ஆவார்.

இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

சம்பவத்தினால் விசனமடைந்த பொதுமக்கள் இராணுவச் சிப்பாய் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளை (12 ஆம் பக்கம் பார்க்க)

# பாப்பரசரின் உடல்நிலை குறித்து தமிழ்ச்செல்வன் கவலை தெரிவிப்பு

(ரோம்)

புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் உடல் நிலை மிக மோசமாகப் பாதிப்படைந்திருப்பது, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும், தமிழீழ மக்களுக்கும் ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது என்று அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் கவலை வெளியிட்டுள்ளார்.

கத்தோலிக்க அதியுயர் பீடம் புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் உடல்நிலை மிக மோசமான நிலைக்குச் சென்றுள்ளது. அவரது இந்த நிலை தொடர்பில் துயரம் கொண்டிருக்கும் அனைவருக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனின் சார்பிலும், தமிழீழ மக்களின் சார்பிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், இத்தாலிய வெளியுறவு அமைச்சின் பிரதிநிதிகளிடம் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இத்தாலிய வெளியுறவு அமைச்சுப் பிரதிநிதிகளுடன் சந்திப்பு இடம்பெற்றபோதே தமிழ்ச்செல்வன் இதனை அவர்களிடம் தெரிவித்தார்.

(இ-4)

# ஐ.ம.சு. அரசை பாதுகாக்க கூட்டுக் கட்சிகள் உறுதி

## ஓராண்டு பூர்த்தியில் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும், அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு ஐக்கியமாகவும் ஒற்றுமையாகவும் செயற்படுவதென கூட்டாக உறுதிபூண்டுள்ளன.

அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஓராண்டுப் பூர்த்தியை நினைவுகூரும் சமய நிகழ்விலேயே மேற்கண்டவாறு உறுதி எடுக்கப்பட்டது.

இச் சமய நிகழ்வில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கூட்டுக் கட்சிகளின் முக்கிய தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டு அரசாங்கத்தில் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்ற போதும் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வரை அரசாங்கத்தைப் பாதுகாத்து வழிநடத்துவது கூட்டுக் கட்சித் (12 ஆம் பக்கம் பார்க்க)

SWISS
Mineral Water
Buy Swiss Mineral and win several lakhs worth of prices

Head office
Gbn, Posfach
8026 Zurich, Switzerland,
Tel.+41 243 82 59
Factory
231, Temple Road,
Nallur, Jaffna.
Tel.+94 77 312 69 63
சுவிஸ் மினறலின் யாழ்குடா நாட்டிற்கான ஏக விநியோகஸ்தர்கள் யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம். தொலை பேசி : 0094 21 222 2662

# யுத்தம் ஓய்ந்த நிலையிலும் கூட தமிழருக்கு இயல்பு வாழ்வில்லை

## பின்லாந்து எம்.பியிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(பின்லாந்து)

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பின்லாந்து பாராளுமன்ற உறுப்பினர் இமெல்டா அஸ்ரினை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பின்லாந்து பாராளுமன்ற கட்டடத்தில் கடந்த வியாழனன்று நடைபெற்ற இச் சந்திப்பில் போர் நிறுத்த உடன்படிக்கையின் செயற்பாடு, தேக்க நிலையில் உள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள், சுனாமிப் பேரலையின் பின்னரான புனரமைப்புப் பணிகள், மனிதநேய செயற்பாடுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு கலந்துரையாடல் நடைபெற்றது.

இரண்டு தசாப்த கால போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு, போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னரும்கூட இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படாதது குறித்தும், சுனாமி நிவாரண புனர்நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான பொதுக் கட்டமைப்பு குறித்தும் இக் கலந்துரையாடலில் பேசப்பட்டது.

இச் சந்திப்பின்போது பின்லாந்துப் பாராளுமன்ற உறுப்பினரும் மனித உரிமைகள் குழுமத்தின் துணை இயக்குநருமான ஹாரி இமெல்டா, சர்வதேச விவகாரங்களுக்கான செயலாளர் பௌா பௌசன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (7,8)

# இலங்கையை நிர்வகிப்பது அரசா? தொழிற்சங்கமா?

## ஐ.தே.க. சந்தேகம்

(கொழும்பு)

இலங்கையை நிர்வகிப்பது கூட்டமைப்பு அரசாங்கமா? அல்லது தொழிற்சங்கங்களா? என சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தொழிற்சங்கங்களின் அச்சுறுத்தல் காரணமாக அமைச்சரவைக் கூட்டங்களையே ஒத்திவைக்கும் நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருக்கிறார்.

இலங்கை மின்சார சபை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் என்பவற்றில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைத் தீர்க்கும் முயற்சியிலும் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளதாக தெரிவித்த அவர், எந்தச் சந்தர்ப்பத்திலும் அத்தியாவசிய சேவைகள் தடைப்படும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (7,9)

# மாகாண சபை மூலமான வரி விதிப்பு வர்த்தகத்தை மந்தமடையச் செய்யும்

வர்த்தகர் மீது வரிகளைச் சுமத்தி வர்த்தக நடவடிக்கைகளை மந்தமடையச் செய்த கூட்டமைப்பு அரசாங்கம் தற்போது மாகாண சபையின் மூலம் மேலும் 5 சதவீத வரியை விதித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

இந்த வரிவிதிப்பானது உள்ளூர் வர்த்தகர்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநுராதபுர மக்களிடையே உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க இந்த நியாயமற்ற வரி விதிப்புக்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது முழுமையான எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் வரிவிதிப்பை இலகுபடுத்தி வங்கிக் கடனை குறைந்த வட்டியுடன் வழங்கி உள்நாட்டு வர்த்தகருக்கு பல சலுகைகளை வழங்கியபோதும் கூட்டமைப்பு அரசாங்கம் இந்த நிலைமையை முற்றாக மாற்றியமைத்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சுனாமி நிவாரண உதவிகள் மற்றும் இந்த ஆண்டுக்கான சர்வதேச கடன் வட்டியை இல்லாமல் செய்தமை ஆகியவற்றின் மூலம் பெருமளவு நிதி கூட்டமைப்பு அரசாங்கத்திடம் உள்ளதாகவும் ஆதலால் இவ்வாறான வரியை விதிப்பதற்கு எந்தவித தேவையும் இல்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (7,9)

# சமாதான நடவடிக்கைகளுக்காக நாட்டை காட்டிக்கொடுக்க மாட்டோம்

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக நாட்டைக் காட்டிக் கொடுக்கப்போவதில்லை என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றும்போது,

ஒவ்வொரு இனங்களினதும் அடையாளங்களை பாதுகாக்கும் அதேவேளை ஒரேநாட்டுக்குள் அனைவரும் இணைந்து வாழும் சூழல் ஒன்றை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இனங்களும் இனங்களும் மோதிக்கொள்ளும் காலம் முடிவடைந்துவிட்டது. இனங்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டால் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது. அபிவிருத்தி மேற்கொள்ளப்படாவிட்டால் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லாது.

ஒவ்வொருவரும் தமது இன அடையாளங்களை பாதுகாத்துக் கொள்ளும் அதேவேளை மற்றைய இன அடையாளங்களை பாதுகாத்துக் கொள்ளவும் உதவவேண்டும்.

இதேவேளை மற்றவரது இன அடையாம் தொடர்பாகவுள்ள நம்பிக்கையீனத்தைக் களைந்து அனைவரும் இணைந்து ஒரே நாட்டுக்குள் வாழக்கூடிய சூழலை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

இந்தக் கடப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளதாகவும் நாட்டை துண்டாட எந்தவேளையிலும் இடமளிக்கப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (7,8,9)

# முதலாம்தர அனுமதி தொடர்பாக நாளை விசேட சந்திப்பு

2006 ஆம் ஆண்டில் தேசிய பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளுவது தொடர்பான விசேட சந்திப்பொன்று நாளை கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாராடிமெல் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு சகல தேசிய பாடசாலை அதிபர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளுவது தொடர்பாக இக் கூட்டத்தின்போது விளக்கமளிக்கப்படவுள்ளது.

முதலாம் தரம் முதல் 12 ஆம் தரம் வரையுள்ள மாணவரின் எண்ணிக்கை 2005 ஆம் ஆண்டில் பாடசாலைக்கு கல்வியியற் கல்லூரிகளூடாக நியமனம் பெற்றவரின் எண்ணிக்கை, ஆசிரியர் பற்றாக்குறைகள், மேலதிக ஆசிரியர்களின் விபரங்கள் போன்றவற்றையும் விசேட கூட்டத்திற்கு வரும் அதிபர்களை கொண்டுவருமாறும் அவர்கள் கோரப்பட்டுள்ளனர். (7,9)

# முன்னெச்சரிக்கை நிலையமாக வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

சுனாமி முன்னெச்சரிக்கையை வழங்குவதற்கான தேசிய நிலையமாக வளிமண்டல திணைக்களத்தை அரசாங்கம் பிரகடனப் படுத்தியுள்ளது.

ஜப்பானிய வளிமண்டல திணைக்களத்திலிருந்து அது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஏ.எச்.பி. தர்மரத்தினவுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் அக்கறையுள்ளவர்கள் பௌத்தலோக மாவத்தை கொழும்பு - 7 இல் உள்ள வளிமண்டலவியல் திணைக்கள பணிப்பாளர் நாயக்திடம் தொடர்பு கொள்ளலாம்.

இந்த அலுவலகம் 24 மணித்தியாலமும் திறந்திருக்கும். தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக 0112684746, 0112694847, 0112694104, 0112587343, ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் அல்லது 0773005775 என்ற கையடக்கத் தொலைபேசியிலும் தொடர்பு கொள்ளலாம். தொலைநகல் இலக்கங்கள் 0112677027, 0112691443 என்பன. (7,8)

# டெங்கு காய்ச்சல் ஒழிப்பு வாரம்

நாளை முதல் 10ம் திகதி வரை டெங்குக் காய்ச்சலை ஒழிக்கும் வாரமாக பிரகடனப்படுத்தும்மாறு கோரி, சுகாதார அமைச்சு சகல பிராந்திய சுகாதார பணிப்பாளர்களையும் மாகாண சுகாதார அமைச்சுக்களையும் கோரியுள்ளது.

இது தொட்ர்பான சுற்றறிக்கை ஒன்று சுகாதார போசாக்கு அமைச்சின் தொற்று நோய் வைத்திய அதிகாரி டாக்டர் என்.அபயசிங்கவினால் சகல சுகாதார நிலையங்களுக்கும் கடிதம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் கடந்த வருடம் இலங்கை பூராகவும் 15 ஆயிரத்து 223 பேர் டெங்குக் காய்ச்சலுக்கு இலக்காகி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் 88 பேர் இக்காய்ச்சலினால் மரணம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக் காய்ச்சலை பரப்பும் நுளம்பினங்கள் தற்போது பரவலாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் எனவே நீர்தேங்கி நிற்கும் இடங்களை அழிக்குமாறும் சனசமூக நிலையங்கள், பாடசாலைகளின் சுகாதார மன்றங்களின் ஊடாக மேற்படி நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை அவ்வப் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரத் தொண்டர்களின் ஊடாக செயற்படுத்துவது அவசியம் எனவும் அத்துடன் வைத்தியசாலைகள் வைத்தியசாலை விடுதிகளில் சுகாதாரமாக சூழலை உருவாக்குமாறும் இந்நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேசசபைகள், நகரசபைகளின் தொழிலாளர்களை ஈடுபடுத்துவது அவசியம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (252)

# வீடியோ புகைப்படக் கலைஞர்களுக்கு

நிதர்சனம் நிறுவனத்தின் ஒளிக்கலை ஒன்றியத்தின் வலிகாமம் மற்றும் தீவகம் வலயங்களுக்கான கூட்டம் இன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

குறிப்பிட்ட வலயங்களைச் சேர்ந்த வீடியோ மற்றும் புகைப்படக் கலைஞர்களை இக் கூட்டங்களில் தவறாது பங்கேற்குமாறு யாழ். மாவட்ட ஒளிக்கலை ஒன்றியம் கேட்டுள்ளது. (இ-4)

# பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த கிராமங்களில் அமைப்பு உருவாகவேண்டும்

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

(சுதுமலை)

பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பெண்கள் அமைப்புகள் கிராமங்களில் உருவாகுவது மிகவும் அவசியமாகின்றது. இவ்வாறு தெரிவித்தார் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் சுப்பிரமணிய சர்மா.

கடந்த திங்கட்கிழமை ஆனைக்கோட்டை சாவல்கட்டு கிராமத்தில் உள்ள தாரகா விதவைகள் மலர்வு மையத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா, தலைவி திருமதி சைலா இதயராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதேச செயலர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த கால யுத்த அனர்த்தங்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இக் கிராமத்தில் 80 ற்கும் மேற்பட்டவர்கள் கணவனை இழந்தும் கணவனால் கைவிடப்பட்டும் பல்வேறு அசௌகரியங்கள் மத்தியில் தமது சிறார்களை வளர்த்து வருவது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

அந்த வகையில் கடந்த மூன்று வருடங்களாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று தமக்கென ஓர் இடம் தெரிவுசெய்து பல்வேறு பயிற்சிகள், சிறுவர்களது உளநலச் செயற்பாடுகள் சுயதொழில் முயற்சிகள் என பலவகை செயற்திட்டங்கள் இந்த அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வருவது மிகவும் பெருமைப்படக்கூடிய விடயம்.

இப்படி ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வாறு பொது அமைப்புக்கள் ஆக்கபூர்வமாக செயற்பட்டால் எமது பகுதி பாரிய வளர்ச்சியடையுமெனவும் மேலும் இச்சங்கத்தின் செயற்பாட்டிற்கு - வளர்ச்சிக்கு தன்னால் இயன்ற அளவு ஆதரவுகளையும் ஒத்தாசைகளையும் வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் கியுடெக் நிறுவன செயற்திட்ட அதிகாரி மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர், சாந்திகப் பிரதிநிதிகள், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் சனசமூக நிலையப் பிரதிநிதிகள் எனப் பலரும் உரை நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் சங்கத்தின் பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட சுயஉற்பத்திப் பொருட்கள், அரிசிமா, மிளகாய்த்தூள், ஊறுகாய், மீன் ஊறுகாய் போன்ற பொருட்கள் எனபனவற்றின் விற்பனையும் பிரதேச செயலாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (க-252)

# மின்கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு மின்சக்தி எரிபொருள் அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது. இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதுபோனால் மின்சார சபை கூடுதல் கடன்பளுவை சுமக்க நேரிடும் என்று மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுனில் பிரேம ஜெயந்த தெரிவித்திருக்கிறார்.

அனல் மின்உற்பத்தி காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 3 ஆயிரத்து 600 மில்லியன் ரூபாவை இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டியிருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன்காரணமாக மின்சார சபை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

எனினும் இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதன் மூலம் நீண்டகால திட்ட அடிப்படையில் வெளிநாடுகளில் இருந்து கடன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (7,9)

## இன்று ஒரு தகவல்

# வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அவரது கையில் ஒரு பை. அது நிறைய பணம் இருந்தது.

அந்தப் பெரியவர் அசதி காரணமாக இலேசாக கண்ணை மூடுகிறார். அந்த நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த ஒருவன் அவர் அருகே மெதுவாக வருகிறான். தந்திரமாக அந்தப பையை எடுத்துக் கொண்டு போய்விடுகிறான். அவன தப்பித்து போவதற்கு முன் அருகில் இருந்தவர்கள் அவனைக் கண்டு விடுகிறார்கள். அவர்கள் உடனே சத்தம் போட பெரியவர் விழித்துக்கொள்கிறார். உடனே எழுந்து ஓடிப்போய் அவனுடன் சண்டை பிடித்து பையை மீட்டுக் கொண்ட பின்தான் அவருக்கு நிம்மதி. அந்த மனிதனுக்கு கொடுக்க வேண்டியதை மற்றவர்கள் கொடுத்தார்கள் இது தான் மனித இயல்பு!.

இதை விட்டு விட்டு அந்தப் பெரியவர் "பணப்பையைத் தானே எடுத்துக் கொண்டு போகிறான். போனால் போகட்டும் நானும் மனுஷன். அவனும் மனுஷந்தானே" என்று வேதாந்தம் பேசமாட்டார்.

அப்படிப் பேசினால் அவர் வேதாந்தத்தைப் பற்றி சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்று அர்த்தம். இதை விளக் குவதற்காக ஸ்ரீ இராமகிருஷ்ணரே ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஒரு காட்டில் ஒரு சாது இருந்தாராம். அவருக்குப் பல சீடர்கள். ஒருநாள் அவர்களை எல்லாம் கூப்பிட்டு வைத்து உபதேசம் பண்ணினார் அந்த சாது.

"இவ்வுலகில் இருப்பவை எல்லாமே கடவுளின் வடிவங்கள். அதை நீங்கள் எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். அப்படிப் புரிந்து கொண்டு எல்லோரையும் வணங்க வேண்டும்" என்றார். எல்லாச் சீடர்களும் மிகவும் அக்கறையாக அதை மனதில் வைத்துக் கொண்டார்கள். ஒருநாள் ஒரு சீடன் விறகு பொறுக்குவதற்காக காட்டுக்குப் போனான். "அவனுக்கு எதற்கு விறகு?" என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஹோமம் வளர்ப்பதற்குத்தான் நடுக்காட்டிலே அவன் போய்க்கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் திடீரென்று ஒரு சத்தம் கேட்டது.யாரோ ஒரு ஆள் மிகவும் பலத்த சத்தம போட்டுச் சொல்கிறார்."யார் எங்கேயிருநதாலும் ஓடிப்போய் விடுங்கள். மதம் கொண்ட யானை ஒன்று வந்து கொண்டிருக்கிறது" என்று அதைக் கேட்டதும் அங்கேயிருந்தவர்கள் ஆளுக்கொரு பக்கமாய் ஓடி ஒளித்துக்கொண்டார்கள். சிலர் கிடுகிடுவென்று மரங்களில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். ஆனால் இந்தச் சீடன் மட்டும் நகரவே இல்லை. "நான் எதற்காக ஓடவேண்டும்? நானும் கடவுள் இந்த யானையும் கடவுள்!" என்று நினைத்துக் கொண்டு அந்த இடத்திலேயே அசையாமல் நின்றான்.

யானை அவனருகே வந்துவிட்டது. இவன் அசையவே இல்லை. நின்ற இடத்திலேயே நின்று கொண்டு கை இரண்டையும் மேலே தூக்கினான். துதிப்பாடல் ஒன்றைப் பாட ஆரம்பித்தான். யானைக்கு மேலேயிருந்த பாகன் சத்தம் போட்டு "ஓடிப் போய்விடு ஓடிப் போய்விடு " என்று கத்தினான்.

அந்தச் சீடனுக்கு அவன கத்தியது பெரிதாகத் தெரியவில்லை. அவன பாட்டுக்கு எதையோ முணுமுணுத்துக கொண்டிருந்தான்.

இவன வேண்டுமானால் அந்த யானையை கடவுளாக நினைக்கலாம். ஆனால் அந்த யானை இவனை கடவுளாக நினைக்க வேண்டுமே. அப்படியெல்லாம் அது நினைக்கவில்லை. இவன் கை இரண்டடையும் மேலே தூக்கிக் கொண்டு நின்றது அதற்கு ரொம்பவும் வசதியாகப் போய்விட்டது. அப்படியே துதிக்கையால் சுருட்டி வளைத்து அவனை மேலே தூக்கியது. வேகமாக ஒரு பக்கமாக அவனை தூக்கி எறிந்துவிட்டுப் போய்விட்டது.

"அம்மா" என்று கத்திக்கொண்டே போய் விழுந்தான். பலமான காயம். ஆச்சிரமத்தில் இருந்தவர்கள் இதைக் கேள்விப்பட்டு ஓடி வந்தார்கள். தூக்கிக்கொண்டு போய் ஆச்சிரமத்தில் படுக்க வைத்தார்கள. இவன மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தான். அப்போது அவனருகே நின்ற சீடன் ஒருவன கேட்டான்.

"யானை வந்ததுதான் உனக்குத் தெரியுமே! நீ ஏன் அங்கிருந்து ஓடவில்லை?" என்று. "உலகத்திலே இருக்கிறது எல்லாமே கடவுளின் வடிவங்கள்! எங்கள் குருதேவர் அப்படித் தானே சொன்னார். அதனாலே யானையைப் பார்த்ததும் கடவுள்தான் வருகிறார் என்று நினைத்துக் கொண்டேன்" என்றான் இவன். குருநாதன் இதைக் கேட்டுக்கொண்டே அங்கே வந்தார். அவர் சொன்னார் "அது சரியப்பா! நீயும் கடவுள் தான்.யானையும் கடவுள்தான் ஆனால் அந்த யானைமேலே அமர்ந்திருந்த பாகனும் கடவுள்தானே! அந்தக் கடவுள் "ஓடிப்போ" என்று எச்சரிக்கை கொடுத்ததே! அந்த வார்த்தையில் உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை?" என்று கேட்டார். சீடன் திருதிரு என்று முழிக்க ஆரம்பித்தான். அப்போது தான் அவனுக்கு அவன் பண்ணிய தப்பு புரிந்தது.

வேதாந்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாததால் வந் விளைவு இது. வேதாந்திகள் மாதிரி இருக்கும் சிலரையும் இந்தக் காலத்தில் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆரம்பத்தில் சொன்ன ரயிலில் பிரயாணம் செய்த ஒருவரைப் போல் வேதாந்தி ஒருவரும் ரயிலில் பிரயாணம் செய்தார். இவர் கையிலேயும் ஒரு பெட்டி இருந்தது. அதையும் நேரம் பார்த்து ஒரு திருடன் அடித்துக்கொண்டு ஓடினான்! எல்லோரும் சத்தம் போட்டார்கள். இவர்கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளவில்லை. "போனால் போகட்டும் பரவாயில்லை. அந்தத் திருடனை ஒன்றும் பண்ணாதீர்கள் பாவம் பிழைத்துக் கொண்டு போகட்டும்" என்று விட்டார். இவர்தான் உண்மையான வேதாந்தி என்று நினைத்து எல்லோரும் காலில் விழுந்து கும்பிட ஆரம்பித்து விடடார்கள். ஆனால் அவர்கள் அனைவருக்கும் ஒரு உண்மை தெரியாது. அதாவது அந்தப் பெட்டியில் இருந்தது முழுவதும் "கள்ள நோட்டு" என்பது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு

# நட்ட ஈட்டுத் திட்டம் இன்று முதல் அமுலாகிறது

(கொழும்பு)

சுனாமிப் பேரலையால் அழிவுக்குள்ளான வீடுகளுக்கு நட்ட ஈடு வழங்கும் நடவடிக்கைகள் இன்று முதல ஆரம்பமாவதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். வீடுகளுக்கு நட்டஈடு வழங்கும் திட்டமானது 4 கட்டங்களாக இடம்பெறும்.இதற்குத் தேவையான 400 கோடி ரூபாவை உலக வங்கியும் சுவீடன் அரசும் வழங்கியுள்ளன.

முற்றாக வீடுகளை இழந்தவர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் அதேவேளை, வீடுகளின் பகுதிகளை இழந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படும்.

அதேவேளை, அரச வங்கிகளான மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியன இன்று முதல் இந்த செயற்திட்டதை ஆரம்பிக்கின்றன. முழுமையாகவும் பகுதியளவிலும் சேதமடைந்த வீடுகளின் புனரமைப்புச் செயற்திட்டங்களுக்காக சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில உள்ள இந்த வங்கிகளின் அனைத்துக் கிளைகளையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடுகளுக்கு அமைய சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் சுமார் 60 ஆயிரம் வீடுகளைப் புனரமைக்க வேண்டியுள்ளது. இவற்றில் 30 ஆயிரம வீடுகளை இந்த செயற்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற்று நிர்மாணிக்க முடியும் என்றும் அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார். (7-3-4)

# நில அதிர்வுகளை எதிர்கொள்ள மக்கள் அறிந்திருக்க வேண்டும்

## பேராசிரியர் தஹநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அண்மைக்கால பூகோள செயற்பாடுகளை நோக்கும் போது நில அதிர்வுகளை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக நாட்டு மக்களுககும் அறிவுறுத்த வேண்டுமென பேராதனை பல்கலைக கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஹபில தஹநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த வியாழனன்று உணரப்பட்ட நில அதிர்வுகள் பாரிய பூமியதிர்ச்சிக்கான முன்னெச்சரிக்கையாகும். எவ்வாறாயினும் நில அதிர்வுகள், அவற்றின் மையம் என்பவற்றைக் கண்டறிவதற்கு போதிய உபகரணங்கள் எமது நாட்டில் இல்லாமை பாரிய பிரச்சினையாகும்.

கொழும்பின் நில அதிர்வுகளின் அளவுகளை அளவிட முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனை இலங்கையைச் சூழவுள்ள பகுதிகளில் ஏற்பட்ட அளவிலான நில அதிர்வுகளாகவே கருதுகின்றோம்.

இந்த நில அதிர்வு நிலப்பகுதியில் உணரப்படும் போது மாடிக்கட்டடங்களில் வாழ்வோர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அங்கிருந்து வெளியேறும் போது குழப்பங்களும் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

ஆகவே நில அதிர்வுகள் ஏற்படும் போது மக்கள் அவற்றை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டுமென, அவர்களுக்கு அறிவுறுத்துவது அவசியமெனவும் பேராசிரியர் தஹநாயக்க தெரிவித்தார். (7-8)

# நீதித்துறையை விருத்தி செய்ய அரசு ஒதுக்கிய நிதி போதாது

## பிரதம நீதியரசர்

(கொழும்பு)

நீதிமன்றக் கட்டடத் தொகுதியைப் பராமரித்தல், நீதியரசர்களைப் பயிற்றுவித்தல் ஆகியவற்றிற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லையென பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தினால் தண்டப் பணமாக விதிக்கப்படும் அனைத்து நிதிகளும் மாகாண சபைகளுக்காக ஒதுக்கப்படுகின்றது.

அந்த நிதியில் 10 வீதத்தை நீதிமன்ற பராமரிப்பு வேலைகளுக்கு ஒதுக்குமாறும் நாம் அரசாங்கத்தை கோரியிருந்தும் அரசாங்கத்திடமிருந்து எந்த வித பதிலும் கிடைக்கவில்லை.

கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதவான் எழுதிய இலங்கையில் வர்த்தக மேல் நீதிமன்றத்தில் "புலமைச் சொத்து" தொடர்பான வழக்கு தீர்ப்புகளின் நூல் வெளியீட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதியரசர்களைப் பயிற்றுவிக்கும் முகமாக அரசினால 1.2 மில்லியன் ரூபா வருடாந்தம் ஒதுக்கப்படுகினற போதிலும் பெருமளவான வேலைத்திட்டம் உலக வங்கி மூலம் கிடைக்கும் நிதி மூலமே செய்யப் படுகின்றது.

கட்டடத் தொகுதியைப் பராமரிக்கவும்,நீதிபதிகளை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளுக்காகவும் மேலதிக நிதியை வழங்குமாறு விடுத்த கோரிக்கைக்கு அரசின் பதில் இன்னமும் கிடைக்கவில்லை. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியில் இருந்து 10 வீதத்தை இச் செயற்பாடுகளுக்கு ஒதுக்குமாறு விடுத்த கோரிக்கையும் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. தற்போது எமது கட்டமைப்பிலிருக்கும் ஊழல காரணமாக இந நிதி துஷ்பிரயோகம் செய்யப்படுமெனக் கூறினார்கள்.

ஆனால் நாங்கள் பெற்றுக்கொடுக்கும் முழு நிதியையும் மாகாணசபைகள் உண்மையாக முகாமைத்துவம செய்யுமாயின் அவற்றில் 10 வீதத்தை நீதிமன்றம் பராமரிப்பு நடவடிக்கைக்கு பயனபடுத்துமென நம்ப முடியாதா? என்றார். (க-8)

# காணாமல் போன இருபிள்ளைகளின் தந்தைக்கு 3 இலட்சம் ரூபா நட்டஈடு!

(கொழும்பு)

இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட பின் காணாமல்போன தனது இரு மகன்மார் தொடர்பான அடிப்படை உரிமை வழக்கில் தந்தையாரான கே.மக்கவளவன் என்பவருக்கு 3 இலட்சம் ரூபாவை நட்ட ஈடாக அரசு வழங்கவேண்டுமென்று மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1990 ஆம் ஆண்டு யூலை 6 ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது கைதுசெய்யப்பட்ட இரு இளைஞர்களும் பின்னர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு ஆட் கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டதாயினும், அது பினனர் 1995 ஆம் ஆண்டு செப்டம்பரில் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக அனுப்பப்பட்டது. விசாரணையின் பின்னர் தனது கண்டுபிடிப்புகளை நீதவான் நீதிமன்றம் 1997 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பிவைத்தது.

இதன் பின்னர் 2000 ஆம் ஆண்டு யூலை மாதம் பிளாணடேசன் பொயின்ற் இராணுவமுகாம் பொறுப்பதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இறந்த இருவரினது உடல்களையும் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது.

ஆனால் பொறுப்பதிகாரி அந்த இருவரும் கைது செய்யப்பட்டதை மறுத்திருந்தார்.

இதேவேளை, இறந்தவர்களின் தந்தையார் 1990 ஆம் ஆண்டு செப்டம்பரில் சிவிலியன் தகவல் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தார். அதில் தனது மகன்மாருடன் தன்னையும் கைது செய்திருந்த இராணுவததினர் அன்று மாலையே தன்னை விடுவித் திருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

அவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டமையை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதியரசர் ஷிரானி பணடாரநாயக்க மேற்படி நட்டஈட்டுக்கு உத்தரவிட்டார். (க-6)

# உளவுத் துறையின் சூழ்ச்சி வலையில்

முப்பது வருடகாலப் போரில் தமிழர்களையும் தமிழர் படையினையும் ஆயுத ரீதியில் வெற்றி கொள்ள ஸ்ரீலங்கா அரசினாலும் அரச படையினராலும் முடியாததைத் தொடர்ந்து உளவியல் யுத்தத்தின் மூலம் தமிழர்களின் மனோபலத்தை தகர்த்தெறிந்து விடுவதன் ஊடாக தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை அழித்து விடலாமா என எண்ணி அரச புலனாய்வு ரீதியிலான உளவியல் யுக்திகளை கையாழுகின்றது.

தமிழர்களின் சுதந்திர விடுதலைப்போராட்டம் ஆயுத பலமும் ஆட்பலமும் பற்றாக்குறையாக இருந்தபோதும் தமது மனோபலத்தினூடாக ஆயுதப் போரில் வெற்றிவாகை சூடியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். தமிழர்களின் மனோபலத்தினையும், உறுதியினையும் நம்பிக்கையினையும் தகர்த்தெறிந்து ஆயுத ரீதியில் தமிழர்களை வெற்றி கொள்ள ஸ்ரீலங்கா அரசு முயல்கின்றது. இவ் உளவியல் செயல்திட்டத் தினை புலனாய்வு ரீதியில்

# சிக்குண்டு சீரழியும் இளம் தலைமுறை

மேற்கொள்ள அரசு காய் நகர்த்துகின்றது.

கற்பனை வளம் பொருந்திய துணைக்கதை நிபுணத்துவத்தைக் கொண்டு தமிழ் மக்களின் உணர்வுளில் ஆழ ஊடுருவி அவர்களின் நாடி நரம்புகளில் கைவைத்து உணர்வுகளை பிரேத பரிசோதனை செய்து பெறப்படும் தகவல்கள் மூலம் மக்களின் மனங்களை தளம்பல் அடையச் செய்யக் கூடியவாறு மிகவும் நுணுக்கமாகவும் திட்டம் வகுத்து வருகின்றது.

இந்த முறையில் மக்கள் மத்தியில் கோமாளித்னமான வதந்திகளைப் பரப்புவதன் மூலம் அவர்களின் தேசப்பற்றினையும், விடுதலை உணர்வினையும் தகர்த்து விட அரசு முயற்சிக்கின்றது. சிங்கள அரச புலனாய்வுப் பணியகம் பொய்த் தகவல்கள் பரப்புவதெற்கென்றே தனிப்பிரிவு ஒன்றை உருவாக்கிருக்கின்றது. தகவல் தொழில்நுட்ப விருத்தியின் பலனாய் இப் புலனாய்வு செயற்பாடு இலகுவாக்கப்பட்டிருக்கின்றது.

அண்மைக்காலங்களில் மக்கள் மனங்களில் அரும்பும் சில சுயநல கசப்புணர்வுக்கும் எதிர்ப்புணர்வுக்கும் மேலாக பொய்த்தகவல்களைப் பரப்பி எரியும் வீட்டிற்கு எண்ணெய் ஊற்றுவது போல் அதனை ஊதிப்பற்றவைத்து உளவியல் போர் நடத்தப்படுகின்றது.

அண்மையில் பிரதேசவாத உணர்வைத் தூண்டி விட்டவர்களே ஸ்ரீலங்கா அரச புலனாய்வுத் துறைதான். கருணாவின் சதிக்கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னரே பிரதேசவாத உணர்வு தூண்டும் வகையில் பல்வேறு விதமான துண்டுப்பிரசுரங்களும், சுவரொட்டிகளும், வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தென் தமிழீழப் பேராளிகள், வடதமிழீழம் சென்று ஏன் போர் செய்ய வேண்டும் என்ற கேள்வியை அரச புலனாய்வுத் துறையினரே முதலில் எழுப்பி மக்கள் மத்தியில் பிரதேசவாத உளவியல் போரை தூண்டி விட்டனர். ஏதோ கிழக்கில் வாழ் தமிழ் மக்கள் மீது அக்கறையும் அன்பும் கொண்டது போல் தமது செயற்திட்டத்தை உருவாக்கியது. இது ஒரு உளவியல் புலனாய்வுப் போர் யுக்தியாகும்.

தமது நலனில் அக்கறை கொண்ட எந்த ஒரு அமைப்பும் எதிரணிகளை வெல்வதற்கு தன்னாலான எல்லாவிதமான வழிகளையும் கையாளும் என்பது வெளிப்படையான உண்மை. மனித உயிர்களுக்கு அறவே மதிப்பளிக்காத தன்மையும் மனித உயிர்களைப்பற்றி சிந்திக்காத போக்கும் ஸ்ரீலங்கா புலனாய்வாளர்கள் மத்தியில் ஆழ வேரூன்றியிருக்கின்றது.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை சீர்குலைக்கவும் போராளிகள் மற்றும் தலைமைகளுக்கிடையே குழப்பங்களையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தவும் மக்களை இயக்கத்திடமிருந்து அந்நியப்படுத்தி அவர்கள் மத்தியில் போராட்ட உணர்வை குறைக்கவும் மனோவியல் ரீதியில் பலவீனமடைய வைக்கவும் பல்வேறு முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இத்திட்டம் மக்களினதும் போராளிகளினதும் மனோவலிமையைக் குறைத்து யுத்தத்திற்கு தாக்குப் பிடிக்வோ போரிடவோ வேண்டிய மன்வலிமையினை பலவீனப்படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளது.

யுத்த காலத்தில் பத்திரிகை சுதந்திரத்துக்கு தடை விதித்து செய்தி தணிக்கையை அமுல்படுத்தி அரசு திட்டமிட்டு புனைந்துருவாக்கி வழங்கும் செய்திகளை ஊடகங்கள் மூலம் வெளியிட்டது. இராணுவத் தோல்விகளை மூடி மறைத்தும் சிறிய வெற்றிகளையே பெரிய வெற்றியென பூதாகாரப்படுத்தியும் சிங்களப் படைகளுக்கு தெம்பூட்டும் வகையிலும் தமிழர் படைக்கு சலிப்பூட்டும் வகையிலும் தகவல்கள் பரப்பப்பட்டுள்ளன. அதே மனோநிலையில் இன்றைய போர் ஓய்வு சமாதான சூழலில் பொய்த்தகவல் பரப்பும் முயற்சிகளை ஸ்ரீலங்கா அரச புலனாய்வாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

பொய்யான தகவல்களைப் பரப்பி மக்களின் மனங்களில் உளவியல் ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்துவதனை ஒரு போராயுதமாகவே அரச் புலனாய்வாளர்கள் பயன்படுத்துகின்றனர். மனச் சோர்வினையும் உளவியல் தாக்கத்தினையும் ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் மனங்களை வெற்றி கொள்ளலாம் என்பது பொதுவான புலனாய்வுத் தந்திரம்.

கல்விமான்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் பதவி உயர்வுகளைக் கொடுத்தும் புலமைப் பரிசில் திட்டங்களை வழங்கியும் இனிக்க இனிக்க ஆசை வார்த்தைகள் கூறியும் உளவியல் ரீதியில் அவர்கள் மனங்களை வென்று உரிமைப் போராட்டத்திற்கு எதிராக தமிழர்கள் திசை திருப்பப்படுகின்றனர். ஒரு சிலருக்கு நிதிகளை அள்ளி இறைத்து அவர்களைப் பயன்படுத்தி ஒட்டுமொத்த தமிழினமும் சிங்கள அரசிற்கு எதிரான புரட்சிகளை செய்யாமல் கட்டுப்படுத்த முனைகின்றது. விலை போன ஒரு சிலரினால் தமிழர்களின் உரிமைப் போராட்டமே சிதைக்கப்படுகின்றது இவ்வாறான அரசியல் தந்திரோபாயத்தில் மக்களை விழிப்பாக இருக்க வேண்டும்

திரிபுபடுத்தப்பட்ட வரலாற்றுச் சித்தாந்தங்கள் மூலம் தமிழரின் கலாசாரம், பண்பாடு, மதம், மூடநம்பிக்கைகள், பொருளாதார வாழ்வு என்பவற்றுடன் பிண்ணிப் பிணையப்பட்ட கருத்துக்களை பரப்புவதன் ஊடாக தமிழர்களின் போராட்டத்தை சிதைப்பதற்கு அரச புலனாய்வுத்துறை முயல்கிறது. யாழ் குடாநாட்டில் தமிழர்களின் பண்பாட்டை சீர்குலைக்கும் வகையில் ஸ்ரீலங்கா அரச புலனாய்வாளர்கள் இளைஞர்களை தூண்டி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா இராணுவம் குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னர் சமூக விரோத கூட்டங்கள் வளரத்தொடங்கின. ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் புலனாய்வாளர்களும் இத்தகைய கூட்டத்தினரை வளர்த்தெடுப்பதில் அக்கறை கொண்டு செயற்படுகின்றனர். விடுதலை உணர்வினையும் தேசப்பற்றையும் அழித்து சமூகச் சீரழிவு,பாலியல் உணர்வுகள் என்பன ஊட்டி வளர்க்கப்படுகின்றன. இவர்கள் புலனாய்வாளர்களின் ஆசிர்வாதத்துடனேயே இவ்வாறு செயற்படுகின்றனர். இவை அரச குற்றவியல் சட்டங்களுக்கு முரணானவை ஆயினும் சட்டத்தையும் ஒழுங்கையும் கையில் வைத்திருப்பவர்கள் இதைக் கவனிப்பதில்லை. இதுவும் இக் கூட்டத்தின் செயற்பாட்டை ஊக்குவிக்கின்றது.

புலிகளின் நடமாட்டங்கள் தொடர்பான தகவல்களைக் கறக்கவும் ஸ்ரீலங்கா புலனாய்வுத்றை மேற்படி கூட்டத்தினை தமது துணைப்படையாக வளர்த்து வருகின்றது. ஸ்ரீலங்கா அரச உளவாளிகளுடன் இணைந்து பாதுகாப்புடன் இவ் இளைஞர்கள் கடையுடைப்பு,திருட்டுப் போன்றவற்றின் மூலம் நிதி சேகரித்து மது, மாது வெறியில் அலைகின்றனர்.

பாலியல் வல்லுறவில் ஈடுபடுவதும் பொழுது போக்காகக் காதலிப் பதும் பெண்கள் மீதான பலாத்காரம், வசப்படுத்தல் அதன்மூலம் பெண்களுக்கும் அரச படைகளுக்குமான பாலியல் உறவுகளை ஏற்படுத்தல் போன்ற செயல்களில் இவ்விளைஞர்கள் செயற்படுகின்றனர்.தமிழினத்தை அழிக்க வேண்டுமானால் அதன் பண்பாட்டையும், கலாசாரத்தையும் அழிக்க வேண்டும் என்ற எண்ணக்கருவில் அரசு செயற்படுகின்றது. அதற்கு தமிழ் இளைஞர்களும் உடந்தையாக இருப்பதும் வேதனைக்குரிய விடயம். தமிழ் பெண்களை காதலிப்பதற்கும் திருமணம் செய்வதற்கும் சிங்கள அரச படையினரும் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் நாட்டம் கொண்டிருக்கின்றார்கள். இவ் விடயத்தில் பெற்றோர் விழிப்பாக இருப்பது அவசியம்.

பொருளாதாரத் தடைகளையும் மருத்துவத்தடைகளையும் ஏற்படுத்துவதன் மூலம் மக்களை பசி பட்டினி பஞ்சத்தில் மூழ்கடிப்பதனால் போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையே முரண் நிலையை உருவாக்கலாம் என அரசு நினைக்கின்றது. புலிகளின் முகாம்களுக்கு அருகிலுள்ள மக்கள் குடியிருப்புகள் மீது குண்டுகளைப் போட்டு அவர்களை கொன்றொழிப்பதனால் புலிகள் மீது மக்களுக்கு விரக்தி ஏற்படும் என்ற ரீதியில் அரச படை உளவியல் வன்முறையை மேற்கொள்கின்றது. உளவியல் ரீதியில் தமிழினத்தை அடிமை கொள்ள தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழிக்க அரசு முயல்கிறது. அதற்காக தமிழ் மாணவர்களின் கல்வியில் கைவைத்து தரப்படுத்தலைக் கொண்டு வந்தது.

பாடசாலைக்கான அபிவிருத்தித் திட்டங்களை தடுத்தது. நிதி ஒதுக்கீடுகளை நிறுத்தியது. ஆசிரியரைக் குறைத்து பாடசாலை வளங்களை கட்டுப்படுத்தியது. அவ்வாறாக தமிழினத்தின் கல்வி சீரழிக்கப்பட்டு அறிவியல் வேகம் பின்தள்ளப்பட்டது. தமிழரின் போராட்ட வளர்ச்சியை அழித்துவிட சிங்கள அரசு போட்ட திட்டங்கள் நிலைமையை தலைகீழாக மாற்றி விட்டது. சிங்கள அரசின் கொடுமைகளினால் பாதிக்கப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் ஆயுதப் போராட்டத்தில் நாட்டம் கொண்டு அரசுக்கு எதிரான ஆயுதப் போரில் ஈடுபடலாயினர்.

சிங்கள அரசின் வெறியாட்டங்களினால் தாயை தந்தையை சகோதரர்களை இழந்தவர்கள் ஸ்ரீலங்கா அரசுக்கும் படைக்கும் எதிராக ஆயுதம் தூக்கிபோராடப் புறப்பட்டனர். விடுதலை உணர்வில் ஊறிப்போன தமிழர்களின் மனோவியல் பலத்தினை தகர்த்து தமிழர்களின் தேசியப் போராட்டத்தை முன்னகர்த்தும் புலி களையும் மக்களையும் பிரித்துவிட அரச புலனாய்வு பீடம் எல்லா விதமான திட்டங்களையும் தீட்டியது சகல விதமான உளவியல் யுக்தி களையும் கையாண்டு மக்களுக்கு மனச்சோர்வினை ஏற்படுத்தி தவறான வழிக்கு இட்டுச்செல்ல முயன்று வருகின்றது. எனவே தமிழ்மக்கள் அதில் மதிமயங்கிவிடாமல் அதியுச்ச விழிப்பு நிலையில் இருக்க வேண்டும்.

நன்றி: இணையத்தளம்

# அபிவிருத்தி சவால்களை எதிர்கொள்ள அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம்

## மாவட்டச் செயலாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

சுதேசிய மட்டத்திலான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தமது நிர்வாக மாவட்டங்கள் பல்வேறு சவால்களை எதிர் கொள்வதாக மாவட்ட செயலாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட செயலாளர்களின் மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவிததிருக்கின்றனர். இலங்கை அபிவிருத்தி நிர்வாக சபையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சகல மாவட்ட செயலாளர்களும் அரச பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைசசர் அமர சிறிதொடங் கொட இந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணிகளை ஒதுக்குவது தற்போது பாரிய பிரச்சினையாகவுள்ளது. கரையோரப் பிரதேசங்களில் பொருத்தமான தனியார் காணிகளை சுவீகரிக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில் காணிகள் சிலவற்றை இனங்கண்டு அவை தொடர்பாகக் குறித்த அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதே வேளை இத்தகைய இடங்களில் நாம் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை காணிகளை அளவிடும் நடவடிக்கையாகும்.

இந்த அளவீட்டு நடவடிக்கையை காணி அளவீட்டுத் திணைக்களத்தின் மூலம் செய்ய முற்பட்ட போதிலும் கடந்த சில நாட்களாக நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக அவை பூரணமாகத் தடைப்பட்டுள்ளது. இதே வேளை பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகளை தாம் எதிர்கொள்ளவதாகவும், இத்தகைய பாரிய சவால்களை வெற்றிகொளவதற்கு அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமென்றும் மாவட்டச் செயலாளர்கள் தெரிவித்தனர். (7-8)

# சுனாமி மறுவாழ்வுத் திட்டத்திற்கு உலக வங்கி 150 மில்லியன் உதவி

(கொழும்பு)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்வுத்திட்டத்திற்கென 150 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்க உலகவங்கி இனங்கியுள்ளது.

இந்தத் தொகையில் 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்கனவே சுகாதாரம், உட்கட்டமைப்புப் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதாக நிதித்திட்டமிடல அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிதியைக் கொண்டு வீதிகள், வீடுகள் என்பனவும் புனரமைக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கான உடன்படிக்கையொன்று பெப்ரவரி மாதம் 13 ஆம் திகதி கைச்சாதிடப்பட்டிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகுதி 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வீடுகள நிர்மாணிப்பதற்கும் உட்கட்டமைப்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும்.

இரண்டாம் கட்டத்திற்கான இவ் ஒப்பந்தத்துக்குரிய திட்டத்தில் நிதித்திட்டமிடல் அமைச்சின் செயலாளர் பி.வி.ஜெயசுந்தரவும் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் கரோல்ட்டும் கைச்சாத்திட்டுள்ளனர். (7-8)

# 4 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னரே பூமி கடுமையான நிலையிலேதான் இருந்தது

(நேற்றைய தொடர்ச்சி.....)

220மில்லியன் ஆண்டுகளில் தோன்றிய 'எரையாஸிக்' யுகத்தில் டைனோஸர் வகைகள், ஊர்வன, பறப்பன, ஓடுவன, நீந்துவன பங்கயா கண்டத்தில் உலவ ஆரம்பித்தன என்று கருதப்படுகிறது. பால் கொடுக்கும் விலங்கினங்கள் அதற்கும் முன்னதாகவே பிறந்துவிட்டன.

குறிப்பிட்ட பயிரினங்கள் நிலத்தில் முளைத்தன. மரவகைகள் வருத்தியாயின. 190 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு 'டிரையாஸிக் யுகம்' முடிந்து 'ஜுராஸிக் யுகம்' உதயமானது. அப்போது மாபெரும் கடற்தட்டுப்பிளவு ஏற்பட்டு, பங்கயா கண்டம் வடக்கிலும் தெற்கிலும் இரு துண்டாய்ப் பிரிந்தது. வடமெரிக்கா கண்டமும், யுரோசியா கண்டமும் தோன்றின. தென்அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றவையும் சேர்ந்து ஒரு கண்டமானது. பிறகு தென்பகுதி பிரிய ஆரம்பித்து, அண்டார்க்டிகா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகியவை தனியே தம் பாதையில் நகர்ந்தன.

இலை, குலை, மரங்களைத் தின்னும் டைனோஸர்கள் எண்ணற்றவை உலவிவந்தன. கடல்கள் நிரம்பி மீன்வளங்கள் பெருத்தன. புராதனப் பால் கொடுக்கும் விலங்கினங்கள் பரவின. முதன் முதலாகப் பறவை இனங்கள் உதித்தன.



136மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே ஜுராஸிக் யுகம் முடிந்து, 'கிரிடேஸிசஸ் யுகம்' பிறந்தது. பங்கயா பெருங்கண்டம் பிரியத் தொடங்கியது. வடஅமெரிக்கா கண்டமும், யுரேசியா கண்டமும் பிரிந்தன.

இடைக்காலத்தில் பலவித பயிரின வகைகள் பெருகின. தலை தூக்கி உலாவிய டைனோஸர்கள் கிரிடேஸிசஸ் யுகத்தின் இறுதியில் அனைத்தும் திடீரென ஒரு பிரளயத்தில் அழிந்தன!

65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, கிரிடேஸிசஸ் யுகம் முடிந்து 'செனொஸாயிக் யுகம்' பிறந்ததும், கணடங்கள் தனித்தனியான முழுமை பெற்றன. மைய அமெரிக்கா, அண்டார்க்டிகா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று கண்டங்களும் இணைந்து, அவை தற்போதுள்ள பகுதிகள் இன்னும் நீர்மயம் சூழப்பட்டிருந்தன. ஆனால் இந்திய உபகண்டம் மட்டும் வடபுறம் பிரிந்து, யுரேஸியாவை நோக்கி மோதுவதற்கு நகர்ந்துகொண்டிருந்தது!

பூதளத்தில் பால் கொடுககும் விலங்கினங்கள் விருத்தியாகி, பல வகைப் பயிரினங்கள் பெருகின.

டைனோஸர்கள் முற்றிலும் எப்படி அழித்துபோயின என்பது புதிராகவும், பூதளவாதிகள் கூறும் வெவ்வேறு காரணங்கள் கருத்துக்கள் யாவும் விவாதத்துக்குரியதாகவும் உள்ளன!

மெக்ஸிகோ வளைகுடா பகுதியில் டிரில்லியன்ஷியன் (1மில்லியன் பில்லியன் (1பின்னால் 18 பூஜியம்) எடையுள்ள விண்கல் அல்லது வால்மீன் மணிக்கு 100,000 மைல் வேகத்தில் விழுந்து பயங்கரச் சுனாமியும், புவியதிர்ச்சியும் உண்டாக்கிக் கடலும், நிலமும் பேயாட்டமாடி ஏற்பட்ட பிரளயத்தில் யாவும் அழிந்தனவென்று ஒரு கருத்து உலவி வருகிறது! அந்தப் பேரதிர்ச்சியால் விளைந்த சூறாவளிப் புயல்கள், சுனாமிப் பேரலைகள், பூகோளக் கானக எரிப்புகள் உற்பத்தி செய்த புகை மண்டலம், பூமியை இருட்டாககி உஷ்ணத்தைத் தணித்து குளிர்வித்துவிட்டதாகவும் ஊகிக்கப்படுகிறது!


கண்டங்கள் நகர்த்தும் அட்லாண்டிக் கடற்தட்டு கடற்தளப் பகுதிகள் கண்டங்களின பூதளப் பரப்பு போல் கரடுமுரடாக வடிவம் கொணடவை! குன்றுகள், குழிகள், சமதளங்கள், பீடபூமிகள், ஆயிரக்கணக்கான அடி ஆழமுள்ள கடலடிச் செங்குததுப் பள்ளத்தாக்ககுள், கடல் மட்டம் தொட்டுத் தலை நீட்டும் எரிமலைத் தீவுகள் ஆகியவற்றை கடற்தளஉளவாய்வு செய்தபோது கண்டு பிடித்துள்ளார்கள்.

மையக்கடல் பிறழ்ச்சிப் புடைப்புகள் எனப்படும் குன்றுகள் 13,000 அடி உயரம் வரை எழுந்து, 40,000 மைல் தூரம் கடலமடியில நீண்டுள்ளது வியக்கத்தக்க, விந்தையான ஓர் இயற்கை வடிவ மாற்றமே! எல்லாவற்றிலும் அட்லாண்டிக் கடற் பகுதியே பூகோளத்தில் மிகப்பெரும் மலைப் புடைப்புப் பரப்பாக இருந்து வருகிறது.

பசுபிக்கடல், மத்தியதரைக் கடல ஆகிய டெதிஸ் கடல்களுடன் ஒப்பு நோக்கினால், அட்லாண்டிக் கடலே இளவயதானது. 160 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு பாங்கயா பெருங் கண்டம் கடற்தட்டுப் பிறழ்ச்சிப் புடைப்புகளால் அகன்று பிரிந்து, இடையே அட்லாண்டிக் பெருங்கடல் உருவாகியது! அதே அகற்சி இயக்கம் இப்போதும நேர்ந்து அட்லாண்டிக் கடல் மடியில் நிகழ்ந்து வருகிறது.

பூமியின் உட்கருத் திரவப் பாறை மேலெழுந்து குளிர்ந்து உண்டாகும் மையத்தட்டுப் புடைப்பால் ஆணடுக்கு .2செ.மீ வீதத்தில் கடல் இரு புறமும் விலகி வருகிறது!

1960 இல் குளோமர் சாலஞ்சர் கடலடி ஆய்வுக் கப்பல் நூற்றுக்கணக்கான துளைகள் தோண்டி எடுத்த செதுக்குப் புழுதி மண் மாதிரிகள் அட்லாண்டிக கடல் அகன்று வருவதை நிரூபித்திருக்கின்றன. பசுபிக் கடல் மடியில் கடற்தளத் தட்டுகள் கண்டங்களுடன் மோதி, எரிமலைகள், பூகம்பங்கள், சுனாமிகள் உண்டாக்குவது போலன்றி அட்லாண்டிக் கடல் மடி அதிர்வுகளின்றி அமைதியாக இருக்கிறது! காரணம் அட்லாண்டிக் கடலும், கண்டமும் ஒரே பிறழ்ச்சித் தட்டு மீது சவாரி செய்கின்றன!




உலகத்தின் மாபெரும நதிகளான அமேஸன், மிஸஸிஸ்ப்பி, ஸெயின்ட் லாரென்ஸ், கொங்கோ, ஓரினாகோ போனறவை தொடர்ந்து செதுக்குப் புழுதிகளை அட்லாண்டிக் கடலில் கொட்டிக்கொண்டு வருகின்றன. அதேசமயத்தில் பசுபிக் கடல் மலைத்தொடர் நதிகள் கடலுக்கு எதிராக வேறு திசையில் ஓடி விழுகின்றன.

1978இல் அமெரிக்கன் கடற்தள ஆய்வு விண்வெளிச் சிமிழ் மூன்று மாதங்கள் 500 மைல் உயரத்தில் பூமியைச் சுற்றிவந்து, கடற்தளங்களை உளவு செய்தது. விண்சிமிழில கடற்தள மட்டத்தை அளக்கும் ரேடார் உயரமானி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன்மூலம் விண்சிமிழுக்கும் கடற்தளத்துக்கும் உள்ள இடைவெளியை 4 அங்குல (10செ.மீ) துல்லிமத்தில் பதிவு செய்யமுடியும்.

விண்வெளிச் சிமிழ் அகன்ற பகுதிகளை உளவக்கூடியதாய் உள்ள போது, குறிப்பிட்ட பகுதிகளை விளக்கமாக வரைபடம் அமைக்க, குளோரியா பக்க உளவு ஒலிக்கருவி பயனபடுத்தப்படடது. அது கருவிககு இருபுறமும் 19 மைல் (30.கி.மீ அதாவது 38 மைல் (60கி.மீ) அகலத்தில் இருக்கும் பகுதிகளின் மேடு பள்ளங்களை அளந்து வரைபடம் அமைக்க உதவியது. குளோரியா கருவி நகரும் வேகம மணிக்கு 18 மைல். அட்லாண்டிக் கடற்தளத்தின் மையத் தட்டுப் புடைப்பை உளவு செய்து கடல் மடியில் ஓடிய நதிகள மாபெரும் செங்குத்துப் பள்ளத்தாக்குகள் கடற்தட்டுக் குழிகள ஆகியவற்றைக் காட்டியுள்ளது.

## குறுகிச் சுருங்கும் பசுபிக் மா கடல்

அட்லாண்டிக் கடல் இன்னும் விரிந்துகொண்டு அகலும் போது, பசுபிக் கடல் மேலும் சுருங்கிக்



கொண்டு குறுகி வருகிறது!

பேரளவு பரவிய பசுபிக் பெருங் கடல், 190 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் பங்கயா பெருங்கண்டத்தைச் சூழ்ந்த அதன் பூர்வகப் பூதக கடல், பந்தலாஸாவில் பாதிப் பரப்பைக் கொண்டது.

உலகிலுள்ள அனைத்து கடலிலும் மிகப் பெரியது பசுபிக்கடல்! அட்லாண்டிக் கடலை விட இரு மடங்கு பெரியது. பூதள நல்ப்பரப்பை விடப் பெரிது. 64 மில்லியன் சதுர மைல் பரப்பை உடைய பசிபிக் கடல் பூதளப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு பகுதியை அடைத்துக் கொண்டுள்ளது!

ஆங்கில எழுததுப் போன்ற ஆழமான குழிகள் பசுபிக் கடற்தளத்தில் உள்ளன போல், வேறெந்தக் கடலிலும் காணமுடியாது. விண்வெளியில ஆய்வுச் சிமிழ் மூலம் 70,000 மைல் உயரத்திலிருந்து பார்த்தால, ஏறக்குறைய அரைப் பூகோளத்தை ஆக்கிரமித்துள்ளது பசுபிக்கடல்.

160 மில்லியன் ஆண்டுகளாக கடலையும் கண்டத்தையும் ஏந்தியுள்ள கடற்தட்டுகள் ஒன்றோடு ஒன்று மோதி, பசுபிக் கடலின் கரையோர அரங்குகள் அமைப்பாகியுள்ளன. பசுபிக் கடலின் இருபுறமும் கடறதட்டுகள் வலிதான கண்டத்திட்டுகளின் கீழே திணிப்புப் பிறழ்ச்சியல் வளைந்து சென்று மறைகின்றன!

விரியும் பசுபிக் மையப் பிறழ்ச்சிப் புடைப்புகள் படைக்கப்படும வேகத்தைவிட, கரைகளில் கடற்தட்டுகள் சுருங்கும் திணிப்பு இயக்கத்தில் மறைந்து போவது விரைவாக நிகழ்வதால், ஒட்டு மொத்தமாக பசுபிக் கடல் குறுகி வருகிறது. நீண்ட கலிஃபோர்னிய மாநிலத்தில் உள்ள அணடிரியா பழுது அத்தகைய கடற்தட்டுப் பிறழ்ச்சியைக் கொண்டுள்ள பூகம்ப அரங்கமாக இருக்கிறது. அட்லாண்டிக் கடல் மடியில் மலைப் புடைப்புகள் மையத்தில் இரண்டாகப் பிரிப்பதுபோல், பசுபிக்கடல்மையத்திலும் புடைத்த மலைத் தொடர் இரண்டாகப் பிரிகிறது.

பசுபிக் கடலைச் சுற்றியுள்ள கிழக்கு மேற்குக் கரைகள், வடக்குத் தெற்குக் கரைகள் எஙகும் கடற்தட்டுக் கீழத்திணிப்பு இயக்கம் ஏற்பட்டு பூகம்பங்கள், எரிமலைகள் உண்டாகும் கடூர அரங்கமாக உள்ளன.

ஆனால் பசுபிக் கடற்கரை அரங்குகள் போல, அட்லாண்டிக் கடறகரை அரஙகுகளில் கடற்தட்டுத் திணிப்புப் பிறழ்ச்சிகள் ஏற்படுவதில்லை. அவ்விதத் திணிப்பு இயக்கத்தால், நிலத்தட்டுகள் வளைக்கப்பட்டு, வடக்கே அலாஸ்கா முதல், தென்கோடி முனைவரை நீண்ட மலைத் தொடர்கள் பல்லாயிரம் மைல் எழும் பியுள்ளன!

மலைப் பகுதியிலிருந்து ஒடுக்கமான கண்டக கரைச் சரிவுகள் 12-24 மைல்கள் (20-40கி.மீ) தூரம் உண்டாகி அடுத்து உடனே ஆழப் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன.

விற்பனைக்கு

சகலவிதமான சொனி, பனசொனிக் ரொசிபா கலர் T.Vகளையும், CD, VCD, DVDகளையும், ரேடியோ கசற் றெக்கோடர்களையும், ரைஸ்குக்கர், காஸ்குக்கர், பிறைசோ குக்கர், மின்விசிறிகள், அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப்செற்கள், சிற்றிசன், சீகோ கைமணிக்கூடுகளையும், சுவர் மணிக்கூடுகளையும், மின்சாரப் பொருட்களையும், அன்பளிப்பு அலங்காரப்பொருட்களையும் ஒரே இடத்தில் நிதான விலையில் பெற்றுக்கொள்ள

நியூ சிற்றி ரேடர்ஸ்

குளத்துக்கு முன்பாக, 135, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்.

T.P: 222 3226

## மின்விளக்கு இன்மையால் மக்கள் சிரமம்

(இணுவில்)

இணுவில் காங்கேசன்துறை வீதி தியேட்டர் சந்தியில் வீதி மின் விளக்கு இன்மையால் பிரயாணிகள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவ்விடத்தில் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் கூடுகின்றனர். கடைகள் இருப்பதாலும் வாகனங்கள் தரித்துநிற்பதாலும் நெரிசல் கூடிய இடம் என்பதால் மின் விளக்கு இன்மையால் இரவு நேரங்களில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் விபத்துக்களும் இவ்விடத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (7-122)

## முதலுதவிப் பயிற்சி வகுப்பு

(கற்கோவளம்)

வாகன விபத்துக்களின் போது ஏற்படும் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் நோக்கோடு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் பருத்தித்துறைப் பிரிவினர் தனியார் சிற்றூர்த்திச் சேவையில் ஈடுபடும் சாரதிகள், நடத்துனர்களுக்கு விசேட முதலுதவிப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தத் தீர்மானித்திருப்பதாக அச் சங்கத்தின் தலைவர் சூ.தவராசா தெரிவித்துள்ளார்.

(7-104)

## பிணைப் பணத்தை பெற்றுக்கொள்ளலாம்

பருத்தித்துறை நீதிமன்றில் 2003 ஆம் ஆண்டு ஆடிமாதத்திற்கு முன்பு பிணைப்பணம் மீளப்பெற விண்ணப்பித்து அனுமதிக்கப்பட்டு தேவைப் படியலில் கையொப்பத்தையும் இட்டவர்களுக்கு பிணைப்பணம் வழங்கப்படுமென பருத்தித்துறை நீதவான நீதிமன்ற பதிவாளர் வ.மார்க்கண்டு அறிவித்துள்ளார். (7-101)

## குழாய்க்கிணறு அமைத்தல்

(கற்கோவளம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தினருக்கும் நூறு குழாய்க் கிணறுகளை அமைத்துக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொணடு வருவதாக அச்சங்கத்தின் பருத்தித் துறைப் பிரிவுத் தலைவர் சூ.தவராசா தெரிவித்தார்.

(7-104)

## "செவ்விளக்கு" நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சேர்ந்த நுண்கலைத் துறையினரின் வழிப்படுத்தலில் நாடகமும் அரங்கியலும் மாணவர்களினால் ஆற்றுகை செய்யப்பட்டுவரும் 'செவ் விளக்கு' நாடகம் இம்மாதம் முற்பகுதியில் வடமராட்சி பிரதேசத்தல் ஆற்றுகை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(7)

## ஏல விற்பனை

பருத்தித்துறை நீதிமன்றில் பல்வேறு சம்பவங்களின் போது அரசுடமையாக்கப்பட்ட ஹண்டர் எல்.எவ். வாகனம் ஒன்றும், யமகாரக மோட்டார் சைக்கிள் ஒன்றும், ஆட்டோ வாகனம் ஒன்றும், பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிமுதல் இப்பகிரங்க ஏல விற்பனை நடைபெறுமென நீதிமன்றப் பதிவாளர் வமார்க்கண்டு அறிவித்துள்ளார். (7-121)

# டாக்டர் நந்தி

# ஈழத்தமிழினத்தின் பொக்கிஷம்



டாக்டர் நந்தி (செல்லத்துரை சிவஞானசுந்தரம்) அவர்கள், இலங்கைத் தமிழர் உணர்வுகளின் பிரதிநிதி. இலங்கை, இந்தியா, தவிர, உலகின் பலபாகங்களிலும் வாழுகின்ற தமிழர்கள் மத்தியில் நன்கு பரிச்சயமும் ஆகர்சிப்பும கொண்டு நேசிக்கப்படுபவர். அவரை ஒரு மருத்துவப பேராசிரியராக, படைப்பிலக்கியவாதியாக, சமூக சேவையாளராக, மானுடநேயம் மிக்கவராக, சன்மார்க்கததைப பரப புகின்ற ஆன்மீகவாதியாக பல்துறைப் பரிமாணங்களில் நோக்க முடிகிறது.

இன்று 77 வயதிலும் தனது பணிகளைத் தொடருகின்ற, சுறுசுறுப்பு மிக்க உழைப்பாளியாக அவர் திகழுககின்றார். 1928ஆம் ஆண்டில் பிறந்த நந்தி அவர்கள், தந்தையாரின் உத்தியோகத்தின் நிமித்தம் பெற்றோர் கொழும்பில் வாழ்ந்தமையால், பளையில் வசிததுவந்த அமமம்மாவுடன தங்கியிருந்து ஆரம்பக் கல்வியைக கற்றவர். பின்னர் சிறிதுகாலம் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றுவிட்டுக் கொழும்பு சென்ஜோசப் கல்லூரியில் உயர் வகுப்புகளில் கற்றவர்.

1952 ஆம் ஆண்டு இலங்கை மருத்துவக் கல்லூரியில் (கொழும்பு) கற்றவர். 1955 இல் எம்பிபி. எஸ் பட்டம்பெற்று குருநாகல் பொது வைத்தியசாலையில் தனது மருத்துவப் பணியைத் தொடக்கியவர்.

1956இல் ஹாப்பிட்டியா கிராம வைத்தியசாலை அதிகாரியாகவும 1958 இல் கொழும்பு லேடி றிஜவே குழந்தைகள் வைத்தியசாலை ஹவுஸ் ஒபிசராகவும், 1958 - 1960 காலபபகுதியில் நாவலப்பிட்டியில சுகாதார வைத்திய அதிகாரியாக ஷும 1963 -1965களில் யாழ்ப்பாணத்தில் சட்ட வைத்திய அதிகாரியாகவும் பணியாற்றியவர்.

பத்து ஆண்டுகள் வைத்திய சாலை எில் பணியாற்றிவிட்டு, தம்மிடத்தே இயல்பாக விளங்கிய ஆர்வத்தினால் சமூக மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்துப் பணி புரிந்தவர்.

1965 ஆம் ஆண்டிலிருந்து பேராதனைப் பல்கலைக்கழத்தில் மருத்துவத்துறை விரிவுரையாளராகவும், 1970 இற்குப் பின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றிவிட்டு, 1979-1993 வரையிலான காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தின் சமுதாய மருத்துவ வியற் பேராசிரியராக விளங்கியவர். சட்டரீதியான ஓய்வின் பின்னரும் வாழ்நாட் பேராசிரியராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இன்று வரை பணிபுரிந்து வருபவர்.

1984 -1988 காலப்பகுதியில் மருத்துவத்துறைப் பட்டாதிபதியாகச் சிறப்பான பணியாற்றியவர். தொற்றுநோயியல், சுகாதார முறைமையியல் துறைகளில் சர்வதேச நிலைபட்ட நிபுணத்துவம் பெற்றவர். ஐ.நா.சபையின் உலக சுகாதார நிறுவனத்தின் மதிப்புரை நிபுணராகப் பணியாற்றியவர். மலேசியா, கொரியா, மொங்கோலியா, இந்தியா, பங்களாதேஷ், மியன்மார், சிம்பாவே ஆகிய நாடுகளுக்குப் பணி காரணமாகச் சென்று வந்தவர்.

1968இல் இலண்டன் பல்கலைக்கழக டீ.பி.எச் பட்டமும், 1971இல் பி.எச்டி பட்டமும் பெற்ற டாக்டர் நந்தியவர்கள், இலங்கைக்குள்ளும், இலங்கைக்கு வெளியேயும் பல்வேறு மருத்துவ, ஆன்மீகக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டவர். பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியவர். பல பல்கலைக்கழகங்களின் பட்டப்பின் படிப்புகளுக்கான ஆய்வுத்தேர்வாளராகப் பணியாற்றி வருபவர். வயது முதிர்ந்த் நிலையிலுங்கூட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எம்.ஈ.டி. உட்பட சில வகுப்புகளில் கற்பிப்பவர். கல்விபெறுதலும், கற்பவர்களுக்கு உதவுவதும் அவரது தலையாய பணிகள் எனலாம்.

முதன்முதலில் நாடகத் துறையே தன்னை ஈர்த்துக் கொணட படைப்பிலக்கியததுறை என டாக்டர் நந்தி கூறியுள்ளார். மருத்துவக் கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் இலங்கை வானொலி நாடகங்களில் கைலாசபதி, சிவத்தம்பி, நா.சுந்தரலிங்கம், சோ.சிவபாதசுந்தரம், ஞானதீபம் முதலியோருடன் 'சானா' வின் வழிகாட்டுதலில் ராஜபோட், டொக்டர்பாட் வேடங்களில் நடித்துள்ளார். 'குரங்குகள்' என்னும் நாடகததை எழுத்தித் தயாரித்தமை, கேட்ானியலின் 'கதை இன்னும் முடியவில்லை' நாடகத்தில் நடித்தமை, தர்மசேன பத்திரராஜாவின் நெறியாள்கையில் 'பொன்மணி' திரைப்படததில் தந்தை வேடமேற்றுச் சிறப்பாக நடித்தமை முதலானவைகள் நந்தியின் நாடகக் கலைத் தாகத்தை உணர்த்துவன.

அரசாங்க ஊழயர்கள் தமது இயற்பெயரைப் படைபிலக்கியங்களில் பயன்படுததுவதிலுள்ள சிரமத்தினால் தாம் மிகவும் மதிப்பு வைத்துள்ள ராஜாஜி அவர்களிடம் தனக்கொரு புனைபெயரைத தருமாறு நந்தி அவர்கள் கேட்டு 1955 இல் கடிதமெழுதினார். 'நந்தி' என்ற புனைபெயரை வைத்துக்கொள்ளவும். பரமசிவன் அருளுவான் என ராஜாஜி அவாகள் அனுப்பிய கடிதத்தை இனறும் பிரேம்போடடு வீட்டின் நடுவில் மாட்டிவைத்துள்ளார் நந்தி. ஆசீாவதிக்கபபட்ட நந்தி எனனும் புனைபெயர் இலக்கிய உலகிற்கு அப்பாலும் அவரைப் பெருமையுடன வாழவைக்கிறது.

டாக்டர் நநதியின் முதலாவது சிறுகதை 'சஞ்சலமும் சந்தோஷமும்' (வீரகேசரி 1947) ஆகும். ஏறததாழ 100 இற்கு மேற்பட்ட சிறுகதைகளைப் படைத்துள்ளாராயினும், இதுவரை 16 நூல்களை நந்தி வெளியிட்டுள்ளாரென பேராசிரியர் கா.சிவத்தமபி குறிப்பிட்டுள்ளார். மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, நம்பிக்கைகள் ஆகிய மூன்றும் நாவல்கள். மலையகப் பகைப்புலத்தல அமைந்தது மலைக்கொழுந்து. இந்நாவல் 1964 இல் இலங்கை சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றது. நந்தியின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி தமிழ் நாட்டின் லில்லி தெய்விகாமணி பரிசைப் பெற்றது. ஊர் நம்புமா?, கண்களுக்கு அப்பால், நந்தியின் கதைகள், தரிசனம் ஆகிய சிறுகதைத் தொகுதிகள நந்தியின் படைப்புக்களாக இதுவரை வெளிவந்துள்ளன. இன்று அவரது ஐந்தாவது சிறுகதைத் தொகுதியின் வெளியீடு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. அருமைத் தங்கைக்கு, அன்புள்ள நந்தினி, நந்தினி உன் பிள்ளை, இதய நோய்களும் தடுப்பும் முதலான மருத்துவ நூல்களுடன், சிறுவர்களுக்கான அறிவுரை நூல்கள், சாயி மேம்பாட்டுக் கல்வி சம்பந்தமான நூல்கள் பலவற்றையும டாக்டர் நந்தி எழுதியுள்ளார்.

இவரது சரஸ்வதியின் வேண்டுகோள், கேள்விகள் உருவாகின்றன, மீண்டும் கேள்விகள் உருவாகின்றன, தரிசனம், உபசேதம் போன்ற பல சிறுகதைகள் வாசகரை ஈர்த்தவைகளாகும்.

நந்தி மானுடத்தின குரலைப் பதிவு செயதவர் என்று பேராசிரியர் சிவத்தம்பியின கூற்றுக்கிணங்கச் சமூகத்தைக் கூர்ந்து நோக்கி மானுடநேயத்துடன் இலககியம் படைத்தவர் நந்தி. எளிமையும் சகிபபுத் தன்மையும் அவரது பெருமைகள். அவ்ரது படைப்புகள் யதார்த்த உலகின் தரிசனங்கள். அடிபட்ட மனதில் ஆழப்பதிந்த வடுக்களின் அர்ததங்கள். நந்தி அவர்கள் எவரோடும் பழகுவதற்கு இனியவர். வாழ்நாள் தோறும் நண்பர்களைப் பெருக்கிக் கொண்டவர்.

அன்பான மனைவியார் சாந்தி மற்றும் நான்கு பெண்பிள்ளைகளுடன் வாழ்பவர். மூன்று பெண்களுக்கு மணம்முடித்து மருமக்களையும், பேரப்பிள்ளைகளையும கணடவர். கி.லக்ஸ்மணஐயர், கவிஞர் மரியநேசன், சால்ஸ் போன்றோரிடம் இளமையில் தமிழ் கற்றதனாலும் சிறிய தந்தை பேராசிரியர் வி.செல்வநாயகத்தின் பாரம்பரியக் கொடையினாலும். நல்ல தமிழ் வாசக நண்பர்களின் சேர்க்கையாலும் சிறந்த ஈழத் தமிழ்ப் படைப்பிலக்கியவாதியாகத் தன்னை உருவாக்கிக் கொண்டவர். இ.மு.எ.சங்கத்தின் பணிகளில் ஈடுபட்டவர். சத்தியசாயி கல்வி மேம்பாட்டுப்பணிகளில் என்றென்றும் தம்மை ஈடுபடுத்தி உழைப்பவர். எல்லாவற்றுக்கும மேலாக மருத்துவத்துடன் ஆனமீகத்தையும் மனிதகுல மேம்பாட்டுக்காக இணைக்கின்ற உறுதி மிக்கவர்.

டாக்டர் நந்தியவர்களின் பணியினால் ஈழத்தமிழ்ச் சமூகமே பயன்பெறுகிறது. நந்தி அவர்கள் 'கொண்டல் மாமழை பொழிநத நுண்பல் துளியினும் வாழிய பலவே' என நாமனைவரும் அவரது 5 ஆவது சிறுகதைத் தொகுதி வெளிவரும் இன்றைய நாளில் வாழ்த்துவோமாக.

**கலாநிதி**
**செ: திருநாவுக்கரசு**

---

## கிழக்கு மாகாணத்தில் தொடரும்

# பொதுமக்கள், போராளிகள் மீதான தாக்குதல்களுக்கு கல்விச் சமூகம் கண்டனம்

(மட்டக்களப்பு)

**இலங்கை அரசினாலும், அதனுடன் இணைந்து செயற்படும் ஆயுதக் குழுக்களாலும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் மக்கள் மீதானதும், அரசியல் பணியில் ஈடுபடும் தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் மீதான தாக்குதல்களைக் கண்டித்தும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி சமூகம், மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரி என்பன கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.**

**அக்கண்டன அறிக்கைகளின் விபரம் வருமாறு,**

### மட்/பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

கடந்த மாதம் 28 ஆம திகதியன்று அம்பாறை மாவட்டத்தின் அரசியல்துறைப் போராளிகள மீது விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட அடாவடித்தனமான நடவடிக்கையினை வன்மையாகக் கண்டிககிறோம்.

இத்தகைய விசேட அதிரடிப் படையினரின் அடாவடித்தனமான நட்டிக்கையைப் புலிகளை வலிந்து போருக்கு இழுப்பதாகவே நாம் கருதுகிறோம்.

சுனாமி அனர்த்தத்தின் பின் நல்ல பிள்ளைகளாக காட்சியளித்த விசேட அதிரடிப் படையினர் தமிழ் மக்களை ஏமாற்றுபவர்களாகவும், அழிப்பவர்களாகவும் விளஙகுகின்றனர். அதனால்தான் ஜே.வி.பி இனவாதம் கக்கும்போதும் புலிகளைச் சீண்டும் வார்த்தைகளால் பேசும் போதும் படையினரின் நடவடிக்கைகள் மிகவும் மோசமடைகின்றன.

இது அம்பாறை மாவட்ட அரசியல் போராளிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் அப்பட்டமாகவே தெரிகின்றது.

எனவே, இத் தாக்குதலினை பல்கலைக்கழக சமூகம் வன்மையாகக் கண்டிப்பதோடு சமாதான பேச்சு ஏற்பாட்டாளாகள் இனிமேலும படையினர் தமிழ் மக்களைச் சீண்டுவதை நிறுத்துவதைக் கண்காணிக்க வேண்டும்.

இதே படையினர்தான் 2002 ஆம் ஆண்டில் காஞ்சிரங்குடாவில் அப்பாவிப் பொதுமக்களையும் மாணவர்களையும் கொன்று குவித்தனர்.

எனவே யுத்த நிறுத்தத்தைப் பேணும் இக்காலத்தில் அரசாங்கம் புலிகளுடன் பேசி இலங்கையில் உள்ள இனப்பிரசசினைக்கு முடிவு காண முன்வரவேணடும் என்றுள்ளது.

### மட்/தேசிய கல்வியியற் கல்லூரி

கடந்த மாதம் 28ஆம் திகதியன்று அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் பிரதேசத்திற்குட்பட்ட மண்டானைப் புனர்வாழ்வு முகாமில் நிராயுதபாணிகளாகிய எமது விடுதலைப்புலிப் போராளிகள் மீது விசேட அதிரடிப்படையினர் மேறகொணட அடாவடித்தனமான நடவடிக்கையினை மட்/தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களாகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் அரசும் புலிகளும் கைச்சாத்திட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் விசேட அதிரடிப்படையினா தங்களது அடாவடித்தனமான நடவடிக்கைகளை தொடர்ந்து மக்கள் மீதும் அரசியல் நடவடிக்கையல் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் மீதும் நிகழ்த்தி வருகின்றனா. இவ்விடயத்தில் யுத்தநிறுத்த காலத்தில் காஞ்சிரங்குடாவில் ஒன்பது பொது மக்கள் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டமையும் நினைவுகூரத்தக்கது.

எனவே தொடர்ந்தும் அரசின் கூலிப்படைகளால் மேற்கொள்ளப்படும் இதுபோன்ற அடாவடித்தனமான நடவடிக்கைகளைக் கல்விச் சமூகமாகிய எம்மால் பொறுத்துக்கொண்டிருக்கமுடியாது.

எனவே அரசும் இது சம்பந்தப்பட்ட தரப்பினரும் இத்தகைய அடாவடித்தனத்துக்கு உரிய நடவடிக்கை எடுப்பதோடு எதிர் காலங்களில் இதுபோன்ற சம்பவங்கள் ஏற்படாது தடுப்பதற்கும் வழிவகை செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

### மட்/தொழில்நுட்பக் கல்லூரி

கடந்த மாதம் 28ஆம் திகதியன்று அம்பாறை மாவட்டத்தின் மணடானை நலன்புரி நிலையத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனை அறிவதற்காகச் சென்ற விடுதலைப் போராளிகளின் மீது காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட அடாவடித்தனமான நடவடிக்கையை தொழில்நுட்பக் கல்லூரி மாணவ சமுதாயமாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இனிமேலும் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாது தடுப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

யுத்த நிறுத்த சூழலில் அரசின் அனுமதியோடு இராணுவகட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசியல் நடவடிக்கைகளைத் தொடரும் விடுதலைப்போராளிகள மீது தொடர்ந்தும் இதுபோன்ற வன்முறைகள் நடைபெறாமல் தடுத்து அவர்களின் அரசியல் நடவடிக்கைகளைத் தொடர இடமளிக்கவேண்டும்.

அப்போதுதான் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்களால் உதவமுடியும்.

அரச கட்டுப்பாடடுப்பகுதியில் கைகளுக்கு விலங்கிடப்பட்டு விடுதலைப்போராளிகளைத் தாக்குவது கோரத்தனமான நடவடிக்கை ஆகும் என்றுள்ளது. (க)

---

## "போரும் சமாதானமும்" தமிழில் வருகிறது

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய "போரும் சமாதானமும்" என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம் விரைவில் வெளிவரவுள்ளது.

அன்ரன் பாலசிங்கமே இந்த நூலைத் தமிழாக்கம் செய்கிறார்.

"போரும் சமாதானமும்" ஆங்கில நூல் அண்மையில் தமிழீழம் உட்பட உலகின் பல நாடுகளிலும் வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (து)

## நற்கருணைப் பேரணி

நற்கருணை ஆண்டைக் கொணடாடும் முகமாக யாழ். கத்தோலிக்க அச்சகமும், யாழ். அடைக்கல அன்னை ஆலயப் பங்கும் இணைந்து நடத்தும் மாபெரும் நற்கருணைப பேரணி இன்று மாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப் பவனியானது நாவாந்துறைப் பரலோக மாதா ஆலயதில் ஆரம்பமாகி ஐந்து இடங்களில் தரித்து நின்று யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தை வந்தடைய இருக்கின்றது.

முதல் தரிப்பிடம் நாவாந்துறை நீக்கிலார் ஆலயத்திலும் இரண்டாவது தரிப்பிடம் மானிப்பாய் றோட் ஐந்து சந்தியிலும், மூன்றாவது தரிப்பு கஸ்தூரியார் வீதி நாவலர் வீதிச் சந்தியிலும் நான்காவது தரிப்பு பஸ் நிலைய லைடன் புடவை நிலையம் முன்பாகவும் ஐந்தாவது தரிப்பு இரண்டாம் குறுக்குத் தெருவிலும் இடம பெறவுள்ளது. இறுதியாக யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தில் இப் பவனி நிறைவு பெறவுள்ளது. கத்தோலிக்க மக்கள் அனைவரையும் இப் பவனியிலே கலந்து இறையருளைப் பெறுமாறு பங்குத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார். (க-19)




## காக்கை அண்ணா...

காக்கை அண்ணா காக்கை அண்ணா
கரைந்து பாடுங்க!

கிளி அக்கா கிளி அக்கா
கொஞ்சிப் பேசுங்க!

குயில் தம்பி குயில் தம்பி
கொஞ்சம் கூவுங்க!

மயில் அண்ணா மயில் அண்ணா
அழகாய் ஆடுங்க!

கொக்குத் தம்பி கொக்குத் தம்பி
நின்று காட்டுங்க!

தங்கச்சிப் பாப்பா தங்கச்சிப் பாப்பா
கூப்பிடுறேனே....!

பறந்து பறந்து
நீங்க எல்லாம் பக்கம் வாங்களேன்!



*A. சர்மிளா, மானிப்பாய்.*

## விடுகதைகள்

1. ஆயிரங்கால் மண்டபம் அழகாக அசைந்து போகுது அது என்ன?
2. வயதுபோன கிழவிக்கு தலையெங்கும் நரைமுடி அது என்ன?
3. மாலுமிக்கு வழிகாட்டி, மாதருக்கு கைக் கருவி அது என்ன?
4. ஒற்றைக் கண்ணன் மனிதனல்ல, உறுமிச்செல்லும் புலியுமல்ல, பொதி சுமக்கும் கழுதையுமல்ல அது என்ன?
5. தச்சன் செய்யாத விசித்திரப் பெட்டி திறந்துமூடும் மந்திரப் பெட்டி அது என்ன?


நீ எதை விழுங்க முடியும்-
எது உன்னை விழுங்க
முடியும்
என்பதை நீ பார்க்க
வேண்டும்.

*-ஓர் அறிஞர்*

## இரண்டு அதிசயங்கள்!

- இரண்டு நாடுகள் இணைந்த நாடு - தான்சேனியா.
- இரண்டு மொழிகளில் தேசியகீதம் உள்ள நாடு - செக்கோஸ்லாவாகியா.
- இரண்டு தேசிய மொழி உள்ள நாடு - ஆப்கானிஸ்தான்.
- இரண்டு நட்சத்திரத்தைத் தேசிய கொடியில் பெற்றுள்ள நாடு - பனாமா.
- இரண்டு தடவை சுதந்திரம் பெற்ற நாடு - சைப்ரஸ்.
- இரண்டு பிரதமர்கள் உள்ள நாடு - சான்மரினோ.
- இரண்டு கண்டத்தில் உள்ள நாடு - துருக்கி.
- இரண்டு தேசியகீதங்கள் உள்ள நாடு- அவுஸ்திரேலியா.

## தலைவர் சொன்னா



**வே**லியோரத்தில் ஏராளமான ஓணான்கள் வாழ்ந்து வந்தன. அன்று தலைவர் ஓணான எல்லா ஓணான்களையும் கூட்டி வரச்சொல்லி தூது அனுப்பியது. தலைவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்க எல்லா ஓணான்களும் கூடின.

"நண்பர்களே... நமக்கு இன்னும் சிறிது நாட்களில் இங்கே பெரிய ஆபத்து வரப்போகிறது. அதற்கு முன்னர் நாம் சுதாரித்துக்கொண்டு நம்மைக காப்பாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையேல் அந்த பேராபத்தில் சிக்கிக்கொள்வோம்'' என்றது தலைவர் ஓணான்.

"தலைவரே, இன்னும் சிறிது நாட்களில் வரப்போகின்ற பேராபத்து என்ன? அதனைப் பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக இருக்கிறோம்'' என்றன மற்ற ஓணான்கள்.

"நண்பர்களே... அருகில் பெரிய பாம்புப் புற்றுகள் ஏராளமாக இருக்கின்றன. அங்கே ஏராளமான பாம்புகள வசித்து வருகின்றன.

இதுநாள் வரையிலும் நாம் அந்தப் பாம்புகளின் கண்களில் - மாட்டிக்கொள்ளாமல் வாழ்ந்து வந்தோம். நேற்று என்னை ஒரு பாம்பு பார்த்து விட்டது. நிச்சயமாக அந்தப் பாம்பு மீண்டும் தன் கூட்டங்களை அழைத்துக்கொண்டு நம்மைத் தாக்க வந்தாலும் வரலாம். அதற்குள் நாம் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் உடனடியாக இந்த இடத்தைவிட்டுச சென்றுவிட வேண்டும். அதற்காகத்தான் நாம எல்லோரும் திடீரென்று கூடி இந்த முடிவினை எடுத்துள்ளோம்'' என்றது தலைவர் ஓணான்.

அதற்கு இளம் ஓணான் ஒன்று, "வந்தால் பார்க்கலாம. ஆபத்தைக் கண்டு அஞ்சி ஓடுவது மடமை. அதை நாம் எதிர்கொள்ள வேண்டும். உங்களுக்கு வயதாகிவிட்டது. நீங்கள் வேணும் என்றால் ஓடுங்க... நாங்கள் பழகிய இந்த இடத்தைவிட்டு வரமாட்டோம்'' என்றது வீராப்பாக.

## கேட்க வேண்டும்

"அது உங்கள் இஷ்டம். இளம் கன்று பயமறியாது. நான போறேன். என்னோடு வருபவர் வரட்டும்'' என்றது தலைவர் ஓணான். எல்லோரும் தலைவரைப் பின்பற்றினர். இளைஞர்கள் கூட்டம் மட்டும அங்கேயே இருந்தன.


மறுநாள்... எதிர்பாராத நேரத்தில் பாம்புகள் கூட்டம் ஒன்று வந்து தாக்கவே இளம் ஓணான்கள் அத்தனையும் தப்பிக்க வழியின்றி இறந்தன. தலைவர் பேச்சைக் கேட்காமல் இப்படி சாகிறோமே... என்று எண்ணியபடியே தங்கள் உயிரை விட்டன இளம் ஓணான்கள்.

பெரியவர்களுக்கு நிறைய அனுபவம் உண்டு. எனவே, அவர்கள் சொல்வதை நாம் கேட்டு நடக்கவேண்டும்.

## இவை உங்களின் ஓவியங்கள்



நிகிந்தா.
யா/இந்து ஆரம்ப பாடசாலை.



சி. கேசவன்
யா/சென்மேரிஸ் வித்தியாலயம்.



சு. பபிசன்
யா/பரியோவான் கல்லூரி.

## கண்டுபிடியுங்கள்

அன்புக் குழந்தைகளே!

இங்கேயுள்ள படங்கள் சிலவற்றில் ஒரு தவறு உள்ளது. அது என்ன என்பதைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.




## உங்களுக்குத் தெரியுமா?

*நின்றபடியே தூங்கும் பிராணி ~ குதிரை
*தண்ணீர் குடிக்காத விலங்குகள் ~ எலி, கங்காரு
*உப்பை விரும்பிச் சாப்பிடும் விலங்கு ~ முள்ளம் பன்றி
*ஐஸ்கிரீமைக் கண்டுபிடித்தவர்கள் ~ரோமானியர்கள்
*உலகிலேயே அதிக முட்டையிடும் உயிரினம் ~ கரையான்
*பைசா கோபுரம் சலவைக் கல்லால் கட்டப்பட்டது.
*சூரியனின் வயது ~ 500 கோடி ஆண்டுகள்
*கூடு கட்டாத பறவை ~குயில்
*நீருக்குள் பறக்கும் பறவை ~ பெங்குயின்
*பூச்சிகளில் வேகமாய்ப் பறக்கும் பறவை ~ தும்பி

சொ.நித்தியா,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

[illegible]

## தண்ணீர் அடியில் மலை



**க**டலின் அடிப்பக்கம் மென்மையாக, ஒரே சம தளத்துடன் இருக்கும் என்று பல நூற்றாண்டுகளுக்கு முன் மக்கள் நம்பினர். ஆனால், ஆழ்கடல் ஆராய்ச்சியில் நவீன சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடலின் அடிப்பகுதியில் பெரிய பெரிய மலைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இயற்கைவாதியான வில்லியம் பெர்பி என்பவர் 1934ஆம் ஆண்டு கடலின் ஆழப்பகுதியை ஆராய்ச்சி செய்தார். 3208 அடி ஆழம்வரை இவர் சென்றார். அந்தக் காலகட்டத்தில் இது மிகத் துணிச்சலான செயலாகக் கருதப்பட்டது. அதன்பின் கடலின் அடிப்பகுதியில் நிறைய மலைகள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 36 ஆயிரத்து 198 அடி உயரம் கொண்ட மிகப்பெரிய மலை ஒன்று கடலின் கீழ் உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அட்லாண்டிக் கடலில் பியூட்ரோரி கோ கடல் பகுதியில் 38 ஆயிரத்து 374 அடி உயரம் கொண்ட மலை ஒன்றுள்ளது. இந்துமகா சமுத்திரத்தில் ஜாவா அருகே 35 ஆயிரத்து 344 அடி உயரம் கொண்ட மலை கடலின் கீழ் உள்ளது. இந்த மலையின் கீழ்ப் பகுதி வரை இதுவரை யாரும் சென்றதில்லை. எனினும் நவீன எலக்ட்ரோனிக கருவிகள் மூலம் இந்த மலையின் உயரம் கணக்கிடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

## நுண்கலைத்துறையினரால் நடாத்தப்பட்ட

# அழகெழல் - 2005 போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத்துறையினரால் கடந்த மாதம் 25 ஆம் 26ஆம் திகதிகளில் நடாத்தப்பட்ட அழகெழல்-2005 போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் பெருந்தொகையான பாடசாலை மாணவர்கள் பங்கு கொண்டதால் போட்டியில் சிறப்புத் தேர்ச்சியடைந்த சித்திரப் போட்டி மாணவர்களுக்கு விசேட சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா மே மாதம் 7ஆம் திகதி நடைபெறும்.

குழுப்போட்டியில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடம் பெற்ற பாடசாலைகளின் நிகழ்வு பரிசளிப்பு விழாவன்று கல்லூரி அரங்கில் நடைபெறும்.

போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

## சித்திரப்போட்டி

### தரம் 4,5

1ஆம் இடம்-பே.டிசேனசன், யா/சென்யோன் பொஸ்கோ. 2ஆம் இடம்-C.சிவமைந்தன், யா/சென்யோன்ஸ் கல்லூரி. 3ஆம் இடம் - ச.பொன்மாறன் யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

### அழகெழல் சிறப்புக் கேடயம் பெறுவோர்

ஆ.ஆன் அனுசியா, யா/திருக்குடும்பக் கன்னியர்மடம். ஸ.கௌசல்யா, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம். கு.துஷ்யந்தி, யா/சென்யோன் பொஸ்கோ.

### சிறப்புச்சான்றிதழ் பெறுவோர்

த.ஜெகதீஸ்வரன், யா/இணுவில் மத்திய கல்லூரி. வி.மதியுகன் யா/கோ/சரவணபவானந்த வித்தியாலயம். பா.பாலஜீவன், யா/இணுவில் மத்திய கல்லூரி. த.வைகேசன், யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம். ச.ஜனனி யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. ம.இனியாள், யா/மகாஜனக் கல்லூரி. இறுக்ஸ்மன் யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம். ந.இந்துசன் யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாலயம். து.மீதுஷா, யா/மகாஜனக் கல்லூரி. ல.டக்ஷாஜினி, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம். க.றோஜினி, யா/மத்திய கல்லூரி. செ.இமாஜினி,யா/இநது மகளிர் ஆரம்பப் பாடசாலை. சபிரணவி, யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. வி.டிலக்சன் யா/சென்யோன்ஸ் கல்லூரி. மா.கஜானி, யா/புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி.

### தரம் 6,7,8 பரிசு பெறுவோர்

1ஆம் இடம் -பி.மீர்ஜவாத், யா/ஒஸ்மானியாக் கல்லூரி. 2ஆம் இடம் -சி.சிவராம், யா/சென்யோன்ஸ் கல்லூரி. 3ஆம் இடம் - பி.நந்திகரன் யா/இந்துக்கல்லூரி.

### அழகெழல் சிறப்புக் கேடயம் பெறுவோர்

த.பஸ்மிலா, யா/ஒஸ்மானியாக் கல்லூரி. து.தணிகைக்குமரன், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம். வி.சாரதாஜினி, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்.

### சிறப்புச்சான்றிதழ் பெறுவோர்

இ.ரஜீவன், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். சி.லிஷானன் யா/புனித அந்தோனியர் கல்லூரி ஊர்காவற்றுறை. ச.சயந்தன் யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம். அ.செ.றஜிதா யா/சென் அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம. ந.துவாரகன், யா/உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரி. சி.கௌசிகன், யா/புனித பத்திரிசியார் கல்லூரி. ச.பவித்திரா யா/இணுவில் மததிய கல்லூரி. த.திசாந், அச்சுவேலி மத்திய கல்லூரி, த.கிரிசாலினி யா/திருக்குடும்பக் கன்னியர் மடம். ந.நர்மினா யா/இந்து மகளிர் கல்லூரி ஏ.வி.பெனிசலஸ் துஷன் யா/ பத்திரிசியார் கல்லூரி. எம்.எம். இஹ்ஷான் ஓஸ்மானியாக் கல்லூரி. ர.ரவிகன், யா/இணுவில் மத்திய கல்லூரி. கோ.மிதுலா, யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்.

ஞா.துளசி யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. செ.குமரேசன், யா/சென்யோன்ஸ் கல்லூரி.இ.ஆன் லக்ஷா, யா/சுண்டுக்குளி மகளிர் கலலூரி. செ.குகநேசன், யா/இந்துக் கல்லூரி. எம்.என்.சப்ராஸ், யா/ஒஸ் மானியாக் கல்லூரி. கே.பிரியங்கா, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. எம்.எஸ். ஹெரிக்சன், யா/சென் பற்றிஸ் கல்லூரி. எஸ்.ஹீநாத், யா/சென்யோனஸ் கல்லூரி. எஸ்.கவிசாந், யா/சென் பறிஸ் கல்லூரி. செ.சிவானுஜா, யா/பெரியபுலம் மகாவித்தியாலயம். தொ.ஸ்ரானிஸ்ரன், யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம். மு.கஜவாணி, யா/ஊரெழு கணேசா வித்தியாலயம். வே.சேயோன், யா/இந்துக் கல்லூரி. சொ.ராஜாராம், யா/சென்யோன்ஸ் கல்லூரி. இபானுஜா, யா/சுண்டுகுளி மகளிர் கல்லூரி. அ.சங்கீதா, யா/இந்து மகளிர் கல்லூரி. அ.ஜெறோம்சனீஸ்வரன், யா/மத்திய கல்லூரி. இ.மயூரன், யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம். வ.மாதுகா யா/தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை ம.வி. க.துளசி, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. செ.குமரேசன், யா/சென யோன்ஸ் கல்லூரி. இ.ஆன்லக்ஸா, யா/சுண்டுக்குளி மக்ளிர் கல்லூரி. செ.குகநேசன், யா/இந்துக கல்லூரி. ஆ.சேப்ராஸ், யா/ஒஸ்மானியாக் கல்லூரி. க.பிரியங்கா, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

### தரம் 9,10,11 பரிசு பெறுவோர்

1ஆம் இடம்-ப.பிரகாஸ், யா/பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம். 2ஆம் இடம் - ஜெ.ஜெயசந்துரு, யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம். 3ஆம் இடம் -சு.சர்மிலன் யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயம். சி.சிவசெந்தூரி, யா/இந்து மகளிர் கல்லூரி.

### அழகெழல் சிறப்புக் கேடயம் பெறுவோர்

நா.ஐஸ்வர்யா, யா/இந்து மகளிர் கல்லூரி. ப.தர்சனமேரியன், யா/நாவந்துறை R.C மகாவித்தியாலயம். சயாழினி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

### சிறப்புச்சான்றிதழ் பெறுவோர்

வி.கவிதரன், யா/வட்டு இந்துக்கல்லூரி. இ.பிரதீசன் யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி. சி.அன்ஸ்ரன் றொபேட், யா/அச்சுவேலி மத்திய கலலூரி. அ.றாஜிந்தன், யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம். ச.பிரசாந், யா/உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம். ச.அபிராமி, யா/இந்து மகளிர் கல்லூரி. ம.றொக்ஸன் அருண், யா/புனித பத்திரிசியார் கல்லூரி. க.மேரி கினோல்யா யா/திருக்குடும்பக் கனனியர் மடம். சி.கௌசல்யன் யா/சென்ஜோன்ஸ் கல்லூரி. க.விக்னன், யா/இந்துக் கல்லூரி. தே.சிந்துஜா, யா/ பாசையூர் சென் அன்லனிஸ். க.பிரியதர்ஸன், யா/சேர். வைத்தியலிங்கம் துரைசாமி ம.வி. த.சிவரூபி, யா/மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலயம். ஜெ.அபர்ணா, யா/ வேம்படி மகளிர் கல்லூரி. சி.டினே ஸன், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. கு.ராகுலன், யா/குப்பிளான் விகனேஸ வராமகாவித்தியாலயம். ஹே.கொனசைன்ரைன், யா/திருக் குடும்பக் கன்னியர் மடம் கு.சுபாஸ்கர், யா/வேலணை மத்திய கல்லூரி. வ.சண்முகராஜ், யா/வட்டு மத்திய கல்லூரி. ரா.சுதர்ஸன, யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

ஸ்ரீ.சியாம்சாந்த், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம். யோ.சுவேந்தன், யா/இணுவில் மத்திய கல்லூரி. மசூர் இர்பான், யா/ஒஸ்மானியாக் கல்லூரி. இ.கௌசலா, யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம். து.குகன். யா/மூளாய் சைவப் பிரகாச வத்தியாலயம் சி.லனுஜன் யா/மெமோறியல் நவோதயக் கல்லூரி. பா.அஞ்சலன் வுஜீவா யா/ஊர்காவறதுறை றோமன் கத்தோலிக் ம.பா. ஜோ.மேரிபூவதனி, யா/ஊர்காவற்துறை மரியோன் மகாவித்தியாலயம. வி.றோக்கா யா/நமசிவாய வீத்தியாலயம். கே.அரசிளம்குமாரன், யா/சென்ஜோன்ஸ் கல்லூரி. செ.மாதுரன், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

### உயர்தரப் பிரிவு பரிசு பெறுவோர்

1ஆம் இடம் -சு.பவித்திரா, யா/செங்குந்தா இந்துக் கல்லூரி. த.கஜேந்திரன் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி. 2ஆம் இடம் -அ.காண்டீபன், யா/இணுவில் மத்திய கல்லூரி. வ.ஸ்ரீவித்தகன் யா/இந்துக் கல்லூரி.

### அழகெழல் சிறப்புக் கேடயம் பெறுவோர்

தே.அகிலன், யா/இணுவில் மத்திய கல்லூரி. ஸ்ரீ.உதயகுமாரன், யா/மத்திய கல்லூரி. ர.சுரேன், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

### சிறப்புச்சான்றிதழ் பெறுவோர்

ப.கஜதீபன். யா/பெரியபுலம் மகா வித்தியாலயம். க.பிறேமலதா, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி. நி.பிரேம் நிஸாந்தன், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. ச.சர்மலா யா/பண்டத்தரிப்பு மகளிர் உயாதரப் பாடசாலை. ப.கிருபாலினி, யா/இந்து மகளிர் கல்லூரி. தி.தயாளினி,யா/கொக்குவில் இநதுக் கல்லூரி. ந.பிரதாஸ், யா/அத்தியார் இந்துக் கல்லூரி. தி.தாரகா யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். அ.கௌசிலிஜா யா/பணடத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை. க.சுயோ யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. ம.துசியந்தன், யா/மானிப்பாய் மெமோரியல் நவோதயக கல்லூரி. செ.கஜந்தன்,யா/மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை.

## ஓவியப்போட்டி

### ஆசிரியர் பிரிவு பரிசுபெறுவோர்

1ஆம் இடம் -M.U.S.நூர்ஜகான் யா/ஒஸ்மானியாக் கல்லூரி. நா.இராஜன், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. 3ஆம் இடம் -வி.சுஜீவ், யா/யூனியன் கல்லூரி. செ.ஸ்ரீலோகநாதன் யா/புனித பத்திரிசியார் கல்லூரி.

### அழகெழல் சிறப்புக் கேடயம் பெறுவோர்

க.தவதர்சன், யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி புத்தூர். து.திலிப்குமார். யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி. கி.நிறஞ்சன் யா/மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயம்.

### சிறப்புச்சான்றிதழ் பெறுவோர்

தி.தீபன், யா/பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை. சி.க.பிரபாகரன் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி. ம.ஜெயரஞ்சினி யா/மகாஜனாக் கல்லூரி. அ.அன்ரன் கிரேசியன் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி. ச.சந்திரசுபநேமி, யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

## தனிநடனம்

### 6,7,8 மாவட்ட ரீதியில் பரிசு பெறுவோர்

1ஆம் இடம் -ஆ.பிரியதர்ஸனா யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. 2ஆம் இடம் - க.சுவீற்றா யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம் 3ஆம் இடம் -பெ.எவறினா யா/மானிப்பாய் மெமோறியல் கல்லூரி.

## உழவர் நடனம்

### மாவட்ட ரீதியில்

1ஆம் இடம் யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. 2ஆம் இடம் - யா/மகஜனாக் கல்லூரி. 3ஆம் இடம் யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.

### சிறப்புக் கேடயம் பெறும் பாடசாலைகள்

யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை. யா/பெரியபுலம் மகா வித்தியாலயம். யா/கோண்டாவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்.

### அழகெழல் சான்றிதழ் பெறும் பாடசாலைகள்

யா/ மானிப்பாய் மெமொறியல் ஆங்கிலப் பாடசாலை. யா/வட்டுக் கோட்டை மத்திய கல்லூரி. யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

### வலய ரீதியாக 1ஆம் இடம்பெறும் பாடசாலை

யா/இந்து மகளிர் கல்லூரி - யாழ்.வலயம். யா/மகஜனாக் கல்லூரி - வலிகாமம். யா/விக்கினேஸ்வராக் கல்லூரி கரவெட்டி - வடமராட்சி.

## குழு இசை

### அபிநயப் பாடல்

### தரம் 4,5 மாவட்ட ரீதியில்

1ஆம் இடம் - யா/திருக்குடும்பக் கன்னியர் மடம். 2ஆம் இடம் -யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. 3ஆம் இடம் -யா/இணுவில் இநதுக் கல்லூரி. யா/கொக்குவில் இந்து ஆரமப பாடசாலை.

### வலய ரீதியில் முதலாம் இடம் பெற்ற பாடசாலை

யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் - யாழ்ப்பாண வலயம். யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் - தென்மராட்சி வலயம். யா/இணுவில் இந்துக் கல்லூரி -வலிகாமம் வலயம்.

### அழகெழல் சிறப்புக் கேடயத்துக்குரிய பாடசாலை

யா/இணுவில் இந்துக் கல்லூரி.

### அழகெழல் சான்றிதழுக்குரிய பாடசாலைகள்

யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை. யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம். யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க.பாடசாலை. யா/பெரியபுலம் மகா வித்தியாலயம.

## சிறுவர் நாடகம்

### மாவட்ட ரீதியில்

1ஆம் இடம் -யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை. 2ஆம் இடம் - யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை 3ஆம் இடம் -யா/ மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

### வலயரீதியில் முதலாம் இடம் பெற்ற பாடசாலைகள்

யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை- யாழ்ப்பாணம். யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் - தென்மராட்சி. யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை -வலிகாமம். யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி - வடமராட்சி.

### சிறப்புக் கேடயம் பெறும் பாடசாலைகள்

யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க மகாவித்தியாலயம். யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. யா/மகஜனாக் கல்லூரி.

### பாராட்டுச் சான்றிதழ் பெறும் பாடசாலை

யா/மத்திய கல்லூரி.

## தனிநடிப்பு

1ஆம் இடம் பா.லதீப், யா/பெரியபுலம் மகா. வித்தியாலயம். 2ஆம் இடம் கு.குணசேகரன், யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. 3ஆம் இடம் வி.ரதிகரன் - யா/ மீசாலை மகா வித்தியாலயம்.

### சிறப்புக் கேடயம் பெறுவோர்

யோ.சுதாகரன், யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. க.கஜானன், யா/அருணோதயாக் கல்லூரி. த.வசந்ததீபன், யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

### பாராட்டுச் சான்றிதழ் பெறுவோர்

இ.ஸ்ராலிங், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி. (க)

## மண் சரிவு

(கண்டி)

குருவிட்ட ஏர வீதியிலுள்ள லக்கந்த என்ற இடத்தில் நேற்று முன்தினம் பாரிய மண்சரிவுவொன்று ஏற்பட்டுள்ளது


இதன் காரணமாக அங்கு பரிய நெருக்கடி நிலை ஏற்பட்டது.

இவ் பாரிய மண்சரிவு காரணமாக சிவனொளி பாதமலைக்கு செல்லும் பாதையில் தடை ஏற்பட்டது.

இதன் காரணமாக சிவனொளி பாமலைக்கு செல்பவர்கள் மாற்றப் பாதையை பயன்படுத்தினர். (7-9)

# எதிர்ப்புகள் நிறைந்த இலட்சியப் பாதையில் எதிர்த்துப் பயணிப்பவனே இலட்சியவாதி

விளையாட்டு வீரனுக்கும், விடுதலை வீரனுக்கும் வெற்றியே இலட்சியம். அந்த இலட்சியத்தை அடை



ந்து கொள்வதற்காகவே நாளும், பொழுதும் பயிற்சிகளாலும், முயற்சிகளாலும் தமது வெற்றிக்கு வலுச் சேர்க்கின்றார்கள். இதைப் போல தான் சாலை வென்ற சத்தியனாக இயேசு கிறிஸ்துவும் தமது உயிர்த்தெழுதலினாலே எங்களுக்கு புது வாழ்வைத் தேடித்தந்தார்.

இயேசு உயிர்த்தெழவில்லை என்றால் கிறிஸ்தவமும் இல்லை. கிறிஸ்தவ விசுவாசமும் வீணானதே என்று புனிதபவுல் கூறியுள்ளார். பொய்மைக்கும், அநீதிக்கும் சாவு மணியடித்து உண்மையும் நீதியும் நிலைபெறச் செய்தவர் ஆண்டவர் இயேசு, உயிர் பெற்றதனாலே அவர் ஆண்டவர் இயேசு என்று ஆராதனைக்கு உரித்துடையவராகின்றார். தந்தையாம் இறைவனே தம்மகனை ஆண்டவராக

## பரமபிதா காட்டியபாதை

உயிர்த்தெழச் செய்து மகிமைப் படுத்தினார்.

### எதிர்ப்புக்கள் நிறைந்ததே இலட்சியப் பாதை

இலட்சிய வாதியின் வாழ்க்கையானது கற்களும், முட்களும் நிறைந்த கரடுமுரடான பாதையாகவே இருக்கும். துன்பங்கள், வேதனைகள், பழிச்சொற்கள் இயலாமைகள் இலட்சியப்பாதையை அடைய விடாமல் தடுக்கும் தடைகளாகும். இத்தடைகளையெல்லாம் தகர்த்து உடைத்தெறிந்து முன்னேறிச் சென்றோரையே இன்று வரலாற்று நாயகர்களாக மதிக்கின்றார்கள்.

தியாகத்தின் மத்தியிலே தாயானவள் குழந்தையைப் பெற்றெடுக்கின்றாள் அதுவரையில் அவள் அடையும் வேதனை அவளுக்குத் தான் தெரியும். மழலையின் பிறப்பால் மரண வேதனையினின்று தப்பிப்பிழைத்தவளாக அன்னை அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. வேதனைகள் எல்லாம் மறைந்து வேறோர் உருபெறுகின்றாள். அதேபோன்று தான் மரித்த இயேசுவை மூன்று நாட்கள் காணமுடியாத சீடர்களுக்கு மிகுந்த கவலையும் வேதனை கலந்த பயமும்அவர்களை ஆட்கொண்டிருந்தது.

வாரத்தின் முதல் நாளான ஒரு நாள் அறைக்கதவுகள் பூட்டப்பட்டிருந்தவேளை இயேசு அவர்கள் நடுவே தோன்றி "உங்களுக்கு சமாதானம என் தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்று பாவ மன்னிப்பின் அதிகாரத்தையும் சீடருக்கு வழங்கினார் சீடர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையோ அளவோ கிடையாது.

### உயிர்ப்பின் ஒளியில் வாழ்வு

நம்பிக்கையின் வழியாகவே நீங்கள் மீட்பைப் பெற்றுக் கொண்டீர்கள் அதன் வழியாகவே கண்காணாத அவரில் மகிழ்ச்சி அடைகின்றீர்கள் என்று புனித பேதுரு தமது திருமுகத்தின் வழியாக மக்களுக்கு எடுத்துரைக்கின்றார். இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே மீட்கப்பட்டவர்கள் என்று கூறும் நாம் அவருடைய நற்செய்தியின் படி வாழ்கின்றோமா நுனிநாவில் தேனும் அடிநாவல் நஞ்சும் நிறைந்த வாழ்வல்லவா நம்வாழ்வு? பணப்பெருமையும் ஜாதிப் பெருமையும், உத்தியோகப் பெருமையும் கொண்டவர்களாய் நம் முன்னைய நிலையை மறந்து வாழும் வாழ்க்கையல்லவா நமது வாழ்க்கை? பண்டைய பெருமைகளைச் சொலலி பாச உறவுகளைப் பிரிந்து வாழ்வதில்லையா? இவையெல்லாம் சாத்தானானவன் எம்மைத் தன்பிடிக்குள் சிக்கவைத்து இயேசுவுக்கு எதிராக எம்மைத் திசை திருப்பியுள்ளதையே காட்டுகிறது. எங்கே நமது விசுவாசம்? எங்கே நமது நம்பிக்கை? எங்கே கிறிஸ்தவ விழுமியங்கள்?

### சாட்சிய வாழ்வு

பயந்து, அஞ்சி நடுங்கி அறைக் கதவுகளை இறுக மூடிக்கொண்டிருந்த சீடர்கள் இயேசு அவர்களுக்கு உயிர்த்த பின் காட்சி கொடுத்ததி

அன்ரனி பீற்றர்

னாலே அவர்களின் வாழ்வு மாற்றப்பட்ட துணிச்சல் நிறைந்த வாழ்வாக மாறியது இயேசுவைப் பற்றிய நற்செய்திகளையும் துணிவோடு எடுததுரைத்து யூதர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார்கள். சீடர்கள், அப்போஸ்தலர்களின் சாட்சிய வாழ்வால் திருச்சபையில் அநேகம் பேர் சேர்ந்து கொண்டு இயேசுவுக்காகத தம் வாழ்வை அர்ப்பணித்தார்கள். இன்றும் நாங்கள் சாட்சிகளாக வாழ வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கின்றார். எம்பணபலத்தையல்ல. எமது முன்மாதிரியான உண்மை வாழ்வை, சாட்சியம விசுவாச வாழ்வை பணிவு நிறைநத சேவைவாழ்வை, முன்வருவோம் பயணிப்போம் இயேசுவின் வழியில். □

## அபராதம் விதிப்பு

(துன்னாலை)

32 ரம் கசிப் வைத்திருந்த துன்னாலையைச் சேர்ந்த ஒருவரை கைது செய்த நெல்லியடி பொலிஸார், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய வேளை குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால், பருத்தித்துறை நீதிபதி க.அரியநாயகம் குற்றவாளியை ரூபா 50 ஆயிரம் அபராதம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் 8 மாத காலம் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தர விட்டுத்தீர்ப்பளித்தார். (7-101)

## கூரை மரங்கள் கழன்று விழும் நிலை

(கற்கோவளம்)

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடத்தின் கூரை மரங்கள் கழன்று விழும் நிலையில் உள்ளன. இதனால் பயணிகள் அச்சத்துடனேயே இந்தத் தரிப பிடத்தில் நிற்க வேண்டியுள்ளது.

எனவே, இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தித் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பயணிகள் கோருகின்றனர். (க-104)

## ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்

(இணுவில்)

சுன்னாகம்பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் பொது மக்களுக்கு அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர்.

குறிப்பாக சைக்கில்களில் சமாந்தரமாக செல்ல வேண்டாம் என்றும மேட்டார் சைக்கில்களில் செல்லும் போது இருவரும் தலைக்கவசம் அணிய வேண்டும் என்றும் அளவான வேகக் கட்டுப்பாடு தொடர்பாகவும் வலியுறுத்தி வீதிகளினூடாகச் சென்று தமது அறிவுறுத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இததகைய காரணங்களாலேயே அண்மைக் காலங்களில் விபத்துக்கள் அதிகரித்துக் காணப்பட்டன என பொலிஸார் தெரிவிக்கின்றனர். (7-122)

## இராசி பலன்

03.04.2005
பங்குனி 21, ஞாயிற்றுக்கிழமை
நவமி பி.ப 2.00 மணிவரை
உத்தராடம் மாலை 05.40 மணிவரை
இராகுகாலம் 04.40 - 06.10 மணிவரை
சுபநேரம் 09.10 -10.40 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சுபநிகழ்வு, கடின முயற்சி, நல்ல தகவல், தொழில் விருத்தி. |
| இடபம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, அச்சமானநிலை. |
| மிதுனம் | வீண்தொல்லை, முயற்சி தடங்கல், வாகன பயம், உடல்வியாதி. |
| கடகம் | அபூர்வ சந்திப்பு, எடுத்த காரியம் கைகூடும், பிரயாண நன்மை, போசனசுகம். |
| சிங்கம் | சுவாரஸ்யம், முயற்சி கைகூடும், போசன நன்மை, பணவருவாய். |
| கன்னி | காரிய இடையூறு, சிறுவியாதி, புதிய விடயம், குடும்பக்கவலை. |
| துலாம் | ரோகநிலை, தன்னம்பிக்கைக்குறைவு, முயற்சி தாமதம், கல்வியில் ஆர்வம். |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை, இனிய அனுபவம். |
| தனுசு | தொழில் மந்தநிலை, பணவிரயம், காரிய தாமதம், விவாதம். |
| மகரம் | ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், நண்பர்கள் உதவி, போசனநன்மை. |
| கும்பம் | அமைதிக்குறைவு, வேலைச்சுமை, பிதா சிந்தை, கோபப்படுதல். |
| மீனம் | தெய்வசிந்தை, பெருமையடைதல், மன மகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

—வளவன்

## பயன்படுத்தப்படாத காணிகள் இளைய சமூகத்துக்கு பகிரப்படும்

(கொழும்பு)

நாட்டின் பல இடங்களில் பயிர்செய்கைக்கு பயன் படுத்தப்படாதிருக்கும் காணிகளை இளைய சமூகத்திற்கு பகிர்ந்தளிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் 7 ஆம் திகதி மாகாண சபைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக விவசாய கால்நடைகள் அமைச்சு அனுரகுமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக்காணிகள் பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலம் உற்பத்திகளின் அளவு அதிகரிக்கும் எனவும் இதற்கென புதிய திணைக்களம் ஒன்று அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவையின் அனுமதியுடன் எதிர்வரும் சில மாதங்களுக்குள் இந்தத் திணைக்களத்தை அமைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (7-9)

## தபாற் திணைக்களத்தை மாற்றியமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் நடவடிக்கைகளை வினைத்திறன் நிறைந்ததாக மாற்றியமைப்பது குறித்துத் தபால் தொலைத்தொடர்பு அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

இதன் அடிப்படையில் தபால் திணைக்களம் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாகத் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜெயரட்ன தெரிவித்திருக் கிறார்.

கடிதங்களைப் பிரிக்கும் பிரிவு, காசுக்கட்டளைப் பிரிவு தந்திப்பிரிவு என்பன நவீன மயப்படுத்தப்படவுள்ளன. இதற்கென திறைசேரி 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நவீன மயப்படுத்தல் நடவடிக்கைக்கு சர்வதேச உதவியுடன் விசேடகுழுவொன்று ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

தபால் சேவையை மேலும் சிறந்த சேவையாக மாற்றுவதே இதன் நோக்கமென அமைச்சர் டி.எம்.ஜெயரத்தின மேலும் தெரிவிததார். (7-9)

## மகளிர் கல்லூரியில் சேமிப்புப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். இலங்கை வங்கி மேற்றரக் கிளையினரால் நாளை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் வங்கியின் சேமிப்புப் பிரிவொன்று உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட இருக்கிறது. (து)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சுகாதார சேவைப்பிரிவினரால் நாளைமறுதினம் முதல் 21 ஆம் திகதி வரை யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

அதன்படி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிமுதல் 10.00 மணி வரை நல்லூர் முருகன் சனசமூக நிலையத்திலும் 10.30 மணிமுதல் 12.30 மணிவரை வன்னியசிங்கம் பொதுப் பணி மன்றத்திலும், பி.ப.2.00 மணி முதல மாலை 4.00 மணிவரை கொன்றையடி சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 6 ஆம் திகதி புதன் கிழமை காலை 8.00 மணி முதல் 10.00 மணிவரை மூத்த விநாயகர் சனசமூக நிலையத்திலும் மு.ப. 10.30 மணிமுதல் 12.30 மணிவரை அரசடி சனசக்தி சனசமூக நிலையத்திலும் பி.ப. 2.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை திருநெல்வேலி சிவன்கோவில் அருகாமையிலும தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளது.

தொடர்ந்து இதே நேர அட்டவணைப்படி 7,12,19,20,21 ஆம் திகதிகளில் குருநகர், அரியாலைப் பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றப்படவுள்ளது.

இச் சனசமூக நிலையங்களின் பெயர் விபரம் நாளைய வலம்புரியில் தொடர்ந்து வரும். (க)

## ஆட்பதிவுத் திணைக்களத்தில் உட்செல்ல கட்டுப்பாடுகள்

(கொழும்பு)

ஆட்பதிவுத் திணைக்களத்தினுள் தேவையின்றி பொதுமக்கள் உட்செல்வதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு நாள் சேவையைப் பெற்றுக்கொள்ளச் செல்பவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் ஆட்பதிவுத் திணைக்களத்தின், பல்வேறு பிரிவுகளுக்கும் செல்வது திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் மட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

'கொழும்பு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை, தெகிவளை, கல்ஹிசை, மெறட்டுவ ஆகிய மாநகரசபைகளும் மஹரகம, வத்தளை, மாபொல ஆகிய நகரசபைக்குட்பட்டவர்களுக்கும் இந்த விதிமுறை நடைமுறைப் படுத்தப்படும்.

ஏனைய பிரதேசங்களில் இருந்து திங்கட்கிழமை, புதன்கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் ஆட்பதிவு திணைக்களத்திற்கு செல்வோருக்கு சலுகை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் தொடர்பாக விசரிப்பதற்கு நாள்தோறும் அதிகளவிலான பொதுமக்கள் இந்த திணைக்களத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்வதால் சன நெரிசல் ஏற்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தப் புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த சனநெரில் காரணமாக அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக ஆட்பதிவு திணைககள ஆணையாளர் ரீ.பி.அழகக் கோன் தெரிவித்திருக்கிறார். (7-9)

# மீள்பார்வை

## பிறியானி விஜேசேகர எழுதிய

# இலங்கையில் பாராளுமன்ற வழக்கம்

## (தமிழாக்கம் : ஆர்.எஸ். வேதநாயகம்) 26



### அத்தியாயம் IX

**திரட்டு நிதியம்**

திரட்டு நிதியம் தான் அரசாங்கத்தின் எல்லா வருவாயும் கடன் வருமானங்களும் அதற்குக்கிடைக் கப்பெறும். எல்லாப் பணத்தொகைகளும் வரவு வைக்கப்படவேண்டிய பிரதான பகிரங்க நிதியமாகும். வேறு ஏதேனும் குறித்த நிதியத்துக்கு ஒதுக்கப்படாத எல்லாப் பணத்தொகைகளும் திரட்டு நிதியத்தின் பகுதியாக அமைகின்றன. எல்லா அரசாங்கச் செல வினங்களும் கூடத் திரட்டு நிதியத்திலிருந்தே செல விடப்படுகின்றன. ஜனாதிபதி இந் நிதியத்திலிருந்து செலவு செய்வதற்கு அதிகாரமளிக்கக்கூடிய இரு சந்தர்ப்பங்களைத் தவிர, பாராளுமன்றமே திரட்டு நிதியைக் கட்டுப்படுத்துவதற்கு அரசியலமைப்பின் 150 ஆம் உறுப்புரை ஏற்பாடு செய்கின்றது.

*எதிர்பாராச் செலவு நிதியம்*

எதிர்பாராச் செலவு நிதியம் அரசியலமைப்பின் 151 ஆம் உறுப்புரையின் கீழும் 1979 இன் 35 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் தாபிக்கப்பட்டுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து பணம் ஒரு முற்பணமாகப் பெறப்படுகின்றது. அதன்பின்னர் இயன்றளவு விரைவில் முற்பணமாகப் பெறப்பட்ட தொகையைப் பதிலீடு செய்வதற்குக் குறைநிரப்பு மதிப்பீடொன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். நிதிப் பிரமாணங்களின் கீழ் ஏலவே ஏற்பாடு செய்யப்பட்டிராத அவசரமானதும் எதிர்பாராததுமான செலவினத்துக்குப் பணம் தேவைப் படுகின்ற போது மட்டும்தான் எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து முற்பணம் ஒன்றுக்கான விண்ணப்பம் ஏற்புடையதாயிருக்கும். கணக்கு வகை மாற்ற நடைமுறை மூலம் பணத்தைப் பெறுதல் பொருத்தமற்றதாகக் காணப்பட்டால் அல்லது சேமிப்புகள் கிடைப்பதற்கு இல்லாதிருந்தால் மட்டும் எதிர்பாராச் செலவு நிதியத் திலிருந்து பணம் பெறப்படலாம்.எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்த முற்பணங்களைப் பெறுவதற்கான மற்றொரு தேவைப்பாடு, குறைநிரப்பு ஏற்பாட்டுக்குப் பாராளுமன்றத்துக்கு விண்ணப்பிப்பதற்குப் போதிய கால அவகாசம் இல்லாதிருக்க வேண்டும்.

எதிர்பாராச் செலவு நிதியமைச்சின் செயலாளரின் கட்டுக்கோப்பின் கீழ் செயற்படுகின்றது.

*ஒதுக்கங்கள்*

மேற்படி நிதியங்களைத் தவிரப் பாராளுமன்றம், ஒதுக்கீடு செய்யப்படாத அல்லது செலவு செய்யப்படாத தொகைகளை ஒரு நிதியாண்டின் முடிவில் ஒதுக்கங்களாக ஒதுக்கிவைப்பற்கு, 1944 இன் 16 ஆம் இலக்க நிதி ஒதுக்கங்கள் சட்டம் ஏற்பாடு செய்கின்றது. அது ஒரு விசேட ஒதுக்கமா பொது ஒதுக்கமாவென்று பாராளுமன்றத்தின் தீர்மானம் வகைப்படுத்த வேண்டும். பாராளுமன்றத் தீர்மானமொன்றின் மூலம் திரட்டு நிதியத்துக்கு ஒதுக்கங்கள் மாற்றப்படுவதற்கு இச்சட்டம் ஏற்பாடு செய்கின்றது. அவ்வாறு அத்தகைய நிதிகள் மாற்றப்படும்வரை அவை ஒதுக்கங்களின் பகுதியாகத் தொடரவேண்டும்.

அரசாங்க நிதியங்களிலிருந்து பணத்தை செலவழிப்பதற்கு அல்லது ஏதேனும் வரியை விதிப்பதற்கு அல்லது மாற்றுவதற்கு அதிகாரமளிக்கின்ற சட்டமூலம் அல்லது பிரேரணை (அதாவது குறைநிரப்பு மதிப்பீடு ஆகியவை மூலம்) எதுவும் அமைச்சரவை அமைச்சர் ஒருவரால் மட்டுமே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படலாம். அத்தகைய சட்டமூலத்துக்கு அல்லது பிரேரணைக்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் தேவை. அத்தகைய விடயங்களில் அமைச்சரவையின் அங்கீகாரம் விசேடமாகக் குறிப்பிடப்பட வேண்டுமென்று விதித்துரைக்கின்ற நிலையியற் கட்டளை 133 மேற்படி கோட்பாட்டையே பிரதிபலிக்கின்றது.

*நிதி அமைச்சரின் பங்கு*

பாராளுமன்றமே பகிரங்க நிதி மீதான மீயுயர் அதிகார சபையாக இருப்பதனால், நிதி அமைச்சர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டுமென்பது பெரும்பாலான சட்டசபைகளில் கடைப்பிடிக்கப்படும் ஒரு வழக்கமாகும். 1948 இன் சோல்பரி அரசியலமைப்பு நிதி அமைச்சர் சனப் பிரதிநிதிகள் சபையின் (செனட் சபையின் அல்ல) ஓர் உறுப்பினராக இருக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தியது. இலங்கை ஒரு குடியரசாக மாறியதிலிருந்து அது ஒற்றை அவையையுடைய ஒரு சட்ட சபையைக் கொண்டுள்ளது. 1978 இன் அரசியலமைப்பு அமைச்சரவையின் தலைவராகவும் அமைச்சரவையில் அமைச்சர் பதவி எதனையும் வகிக்கக் கூடியவராகவுமுள்ள ஒரு நிறைவேற்று ஜனாதிபதிக்கு ஏற்பாடு செய்தது.

நிதி அமைச்சரென்ற பதவியை ஜனாதிபதி வகித்தலை அரசியலமைப்புக்கு குறிப்பாகத் தடை செய்யாத போதிலும் அரசியலமைப்பை வரைவு செய்தவர்கள் இக்கோட்பாட்டை அடிப்படையில் ஏற்றுக்கொண்டி ருந்தனரென்பதை உறுப்புரை 151 புலப்படுத்துகின்றது. நிதி அமைச்சர் எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து முற்பணங்களை எடுப்பதற்கான அதிகாரத்துக்கு ஜனாதிபதியின் சம்மதத்தைப் பெறவேண்டுமென்று 151 ஆம் உறுப்புரையின் துணை உறுப்புரை (2) ஏற்பாடு செய்கின்றது. இது அதிகாரத்தை வேண்டுகின்ற அமைச் சரும் சம்மதத்தை அளிக்கின்ற ஜனாதிபதியும் இரு வெவ்வேறு ஆட்களாக இருக்க வேண்டுமென்று குறிப்பால் சுட்டுகின்றது. எனவே நிதி அமைச்சர் பதவியை ஜனாதிபதிக்கு ஒப்படைத்தலானது பகிரங்க நிதி மீது பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டை அரித்துவிடுகின்றதா என்பது அரசியலமைப்புச் சார்ந்த ஒரு விவாதத்துக்கு சுவாரஸ்யமான ஒரு தலைப்பாக இருக்கும்.

1993 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டு சட்டமூலமும் வருடாந்த வரவு செலவுத் திட்டமும் நீதி அமைச்ச ராகவுமிருந்த பிரதிநிதி அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வேளையில், நீதி அமைச்ச ருமாயிருந்த பிரதிநிதி அமைச்சர் ஓர் அமைச்சராக இருந்தபடியால் அவர் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கலாமென்ற கருத்துப்பட அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கும் நிலையியற் கட்டளைகளுக்கும் பொருள் கொள்ளப்பட்டது.

*ஜனாதிபதியின் தத்துவங்கள்*

உறுப்புரை 150 (3) இரு வகையான சூழ்நிலைகளில் திரட்டு நிதியத்திலிருந்து பணத்தை எடுப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட தத்துவங்களை ஜனாதிபதிக்கு அளிக்கின்றது. முதலாவது ஒதுக்கீட்டு சட்டமூலம் ஒரு சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்படுகின்ற போது அத்தகைய ஒரு நிலைமையில் பகிரங்க சேவைகளுக்கு அவசியமான நிதிகளைத் திரட்டுநிதியிலிருந்து எடுப்பதற்கு ஜனாதிபதி அதிகாரமளிக்கலாம். ஆயின் அதுவும் புதிய பாராளுமன்றம் கூடுவதற்கு அழைக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு மட்டும் அவ்வாறு எடுக்கப்படுபவை முற்பணங்களென்ற தன்மையில் அல்ல எனினும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிதியாண்டுக்கு மட்டும் அத்தகைய செலவினம் அதிகாரமளிக்கப்படலா மென்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.எனவே அடுத்து வரும் ஆண்டுக்கான அத்தகைய செலவினத் துக்கு ஜனாதிபதி அதிகாரமளிக்கமுடியாது.

அத்தகைய இரண்டாவது நிலைமை 150(4) ஆம் உறுப்புரையின் கீழ் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்துணை உறுப்புரையின் கீழ் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கின்றவிடத்து தேர்தல்களுக்கான ஏற்பாடு ஏற்கனவே செய்யப்பட்டிருந்தாலன்றித் தேர்தல்களுக்குத் தேவையான செலவுகளைத் திரட்டு நிதியத்திலிருந்து வழங்கும்படி ஜனாதிபதி அதிகாரமளிக்கலாம். அத்தகைய ஆணை தேர்தல் ஆணையாள ருடன் கலந்தாலோசித்த பின்னர் வழங்கப்பட வேண்டும்.

*ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (வருடாந்த வரவு செலவுத்திட்டம)*

வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலம் வெறும் நிதிச் சட்டமூலமொன்றல்ல .அது அரசாங்கத்தின் அதிகாரப் பிரயோகத்தையும் முந்துரிமைகளையும் பிரதிபலிக்கின்றது. அது அரசாங்கத்தின் அரசிறை வருமான உபாயத்தின் மைய உறுப்பாக விளங்குவதுடன் பொருளாதார நிருவாகத்துடனும் பிணைக்கப்பட்டுள்ளது. நிதியைக் கையாள்கின்ற மிக முக்கியமான அச்சட்டமூலம் குறிபிட்ட நிதியாண்டில் அரசாங்கச் செலவினம் எல்லாவற்றுக்கும் தேவையான பணத்தொகைகளை ஒதுக்கீடு செய்கின்றது. (தொடரும்)

# சுனாமியால் பாதிப்புற்ற வீடுகளுக்கு நட்டஈடு

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக் கபபட்ட வீடுகளுக்கு நட்டஈடு வழங் குவதற்கான விண்ணப்பங்களைக் கோர அரசு முடிவு செய்துள்ளது.

நூறு மீற்றர் பாதுகாப்பு வலயத் திற்கு வெளியே பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு நட்டஈடு வழங்குவதற கான விண்ணப்பங்களை இன்று முதல் அரசு கோரவுள்ளது.

எதிர்வரும் எட்டாம் திகதி முதல் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் ஊடாக இந்த நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

வீடுகள் முற்றாக அழிந்து போயி ருந்தாலோ அல்லது 40வீதத்திற் கும் அதிகமாக சேதமாகி இருந் தாலோ அவற்றுக்கு நடடஈடாக இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அதனைவிட குறைவாக சேத மடைந்த வீடுகளுக்கு ஒரு இலட்ச ரூபா வீதம் வழங்கப்படும்.

இவ் எல்லைக்குள் பாதிக்கப் படடு நட்டஈடு பெறவுள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 10 ஆயிரம் அளவில் இருப்பதாக அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது. (க)

## மின் விநியோகம்

(அம்பன்)

மணற்காடு கிராமத்தில் மின் சாரம் வழங்குவதற்காக மின் இணைபபு வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மின் இணைப்பு பணிகள் முடி வடைந்ததும் இப்பகுதிக்கு மின் சாரம் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-56)

## பொதுச்சபைக் கூட்டம்

பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத் தின கிளைகளுக்கான பொதுச் சபைக் கூட்டங்கள் அந்தந்த கிளை களுக்கென ஒதுக்கப்பட்ட இடங் களில் கிளை பொதுச்சபை அமைக்க அதிகாரமளிக்கப்பட்ட அலுவலா களின் (தவிசாளர்களின்)தலைமை யில் எதிர்வரும் 9ஆம்திகதி சனிக் கிழமை காலை10.00மணிக்கு நடை பெறவுள்ளது. (7-104)

# வெளிநாடுகளுக்கு செல்வோரின் கல்வித்தராதரம் ஆராயப்படும்

(கொழும்பு)

மததிய கிழக்கு உட்பட வெளி நாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற் றுச் செல்லும் இலங்கையர்களை அங்கு அனுப்புவதற்கு முன்னர் அவர் களின கல்வித்தரத்தை ஆராய்ந்து அவர்கள் தொடாபில் நறசான்றிதழ களை பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை எழுந்துள்ளதாக வெளியுற வுத்துறைப் பிரதி அமைச்சர் பேராசி ரியர் விஸ்வ வர்ணபால தெரிவித் திருக்கிறார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணி யகத்துடன் இணைந்து திட்டத்தை முன்னெடுக்க எண்ணியுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகள் உட்பட வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்காக செல்லும் சிலா அங்கு முறைகேடாக நடநதுகொள்வதால் இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படு வதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் பிரதி அமைச்சர், சவுதி அரேபியாவிற்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்ற இலங்கை யா மூவருக்கு அந்நாட்டவா ஒருவரை கொலை செய்த குற்றத்திற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (7-9)

# சிறுபான்மை மக்களின் சுயநிர்ணய உரிமைக்குரலை வரவேற்கின்றோம்

## ஐக்கிய சோசலிசக் கட்சி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை சிறுபான்மை மக்க ளின் சுயநிர்ணய உரிமைக்கான குரலை ஐக்கிய சோசலிசக் கட்சி வரவேற்கிறது என கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சோசலிச அரசியல் வேலைத் திட்டததின் அடிப்படையில் தொழி லாளர் வர்க்கம் ஒன்றுபட வேண் டும் எனக் குறிப்பிட்டுள்ள அந்த அறிக்கையில் பாட்டாளி வர்க்கத் தினதும் மக்களின் ஜனநாயக உரி மைகளுக்காகவும் போராடும் எமது கட்சி இந்நாட்டில் சோசலிச ஐக்கி யத்திற்காகச் செயற்படும் ஒரே கட் சியாகும்.

தமிழ்,சிங்கள, முஸ்லிம் இன பேதமின்றி அனைவரையும் ஒன்றி ணைத்து எமது வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அது மட்டுமன்றி சுனாமி அனர்த்தம் ஏற் பட்டபோது பாதிக்கப்பட்ட யாழ்ப் பாணம்., முல்லைத்தீவு மற்றும் கிழக்கு மாகாணத்திற்கும் சென்று ஏம்மால் இயன்ற உதவிகளை மக் களுக்குப் புரிந்துள்ளோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய சோச லிசக் கட்சியின் பொதுச் செயலா ளர் சிறிதுங்க ஜயசூரிய கடந்த 25,26 ஆந் திகதிகளில் இரத்மலான கம்கரு செவன மண்டபத்தில் நடை பெற்ற பிரதிநிதிகள் மாநாட்டில் உரையாற்றுகையில்,

இலங்கையில் வாழும் சகல இன மககளும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அனைவரும் சுதந்திர மாக வாழவேண்டும். குறிப்பாக தமிழ் பேசும மக்கள் சுயநிர்ணய உரிமை யுடன் வாழவேண்டும். உரிமை கோரி அவர்கள் நடாததும் நியாயமான போராட்டத்துக்கு என்றும் நாங்கள் ஆதரவு அளிப்போம என்றார்.

இம்மாநாட்டின் முதல் நாள் அமர்வுக்கு மத்திய குழு உறுப் பினாகளான ஜயந்த மாகல்லா கொட, அப்துல் ஜபார் மற்றும் மொழி பெயாப்பாளா சருக் ஆகியோரும் இரண் டாம் நாள் அமர்வுக்கு சட்டத்தரணி சிறிநாத் பெரேரா, தம்மிக்கா, ஷாந் தன் சத்தியகீர்த்தி ஆகியோர் தலைமை தாங்கினர்.

இம்மாநாட்டில் உலகத் தொழி லாளர் கூட்டமைப்பின் தலைவரும் இங்கிலாந்து சோசலிசக்கட்சியின் பிரதம செயலாளருமான பீற்றர் டெப், பாகிஸ்தான் பிரதிநிதி காலிட் பா.்.தி, இந்தியா பெங்களூரைச் சேர்ந்த ஜி.்.ஸ் ஜெகடீஸ்,மலேசிய சோச லிசக் கட்சியின் பொருளாளர் ஏ. சிவ ராஜன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பீற்றர் டெப் உரையாற்றுகையில்,

சோசலிசம் மூலம் தான் பாட்டாளி மற்றும் வறிய மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு காண முடியும். எமது தோழர்கள் இங்கிலாந்தில் வீதி வீதியாகச் சென்று சுனாமி நிதி திரட் டினார்கள். சுயநிர்ணய உரிமையை சிறுபான்மை மக்களுக்கு வழங்க வேண்டும் அதன் மூலமே இந்நாட் டின் பிரச்சினையைத் தீர்க்க முடி யும்.

இதன் அர்த்தம் நாட்டைப் பிரித் துக கொடுப்பதல்ல என்றார். காலிட் பா.்.தி உரையாற்றுகையில்,

இந்தியா, பாகிஸ்தான், இலங் கை போன்ற நாடுகளில் முதலாளித் துவத்தை எதிர்த்துப் போராடுவது மிகவும் முக்கியமானது. தொழிலா ளாகளை அடக்கிவைப்பது இந் நாடுகளில் மிகவும் பயங்கரமான பிரச்சினையாக உருவெடுத்துள் ளது. இதனால் மக்கள் நிம்மதி யாக இருக்கமுடியாது என்றார். யாழ் பாணத்தைச் சேர்ந்த எஸ். நகுலராஜா மத்தியகுழுவுக்குத் தேர்ந்தெடுக் கப்பட்டார். (க)

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி- குறள்

வலம்புரி

## மருத்துவர்கள் அவதானமாக செயற்படவேண்டும்

உலகில் மிகவும் பெருமதியானது எதுவென்ற கேள்வி எழுப்பப்பட்டால் அதற்கான விடை மனித உயிர் என்பதாகவே இருக்கும்.

எனவே உலகின் மிக உன்னதமான மனித உயிரைக் காப்பாற்றுவது, அதற்குரிய மதிப்பை வழங்குவது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

அதிலும் மனித உயிரைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள், தாதிமார் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஊழியர்களின் அர்ப்பணிப்பு மிகவும் அவசியமானதாகும்.

தமது உயிரைக் காப்பாற்றுவார்கள் என்ற ஒரே நம்பிக்கையிலேயே நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் செல்கின்றார்கள். இங்கு நோயாளர்களின் நம்பிக்கைக்குரிய கடவுளர்களாக வைத்தியர்களும், தாதிமாரும் அதனோடு இணைந்தவர்களும் இருப்பர்.

இவ்விதம் நம்பிச்செல்கின்றவர்கள் உரியமுறையில் கவனிக்கப்படாவிட்டால் அது மிகப்பெரும் பாவச்செயலாக இருக்கும். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவர் பூரண சுகமடைந்து வீடு செல்கின்றபோது அவரின் கண்முன் தனக்குச் சிகிச்சையளித்தவர்களே தெய்வங்களாக் காட்சிகொடுப்பர்.

அதன் காரணமாகவே குணமடைந்தவர்கள் தமக்குச் சிகிச்சையளித்த டாக்டர்களின் நாமங்களை அடிக்கடி உச்சரித்துக் கொள்வர். அந்த உச்சரிப்புக்குள் இருக்கக்கூடிய தூய்மை, பக்தி, அன்பு, அப்பழுக்கற்ற நம்பிக்கை என்பன அற்புதமானவை.

இந்த அற்புதத்தை வைத்தியர்கள், தாதியர்கள் தவிர்ந்த வேறுயாருமே பெற்றவிடமுடியாது. அதனாலேதான் குறிப்பிட்ட சில வைத்தியர்கள் மக்கள் மனங்களில் நிலைத்துநிற்கின்றார்கள்.

அதேநேரம் நோயாளர்களுடன் அன்புடன் பழகாமல், நோயாளர்கள் மீது கோபங்கொள்ளும் வைத்தியர்களை மக்கள் அங்கீகரிப்பதில்லை. அவர்களுக்கென விசேட பெயர்களைச் சூட்டி இவரா, அவரா என முகத்தைச் சுழித்துக்கொள்வதையும் நடைமுறையில் நாம் கண்டுகொள்கிறோம்.

சதா நோயாளிகளுடன் பழகுகின்றபோது அதனால் டாக்டர்கள், தாதியர்கள் உட்பட துறைசார் ஊழியர்கள் விரக்தியடைவதும், கோபமடைவதும் இயல்பானதே. எனினும் "வைத்தியர்கள் இறைவனுக்குச் சமமாகக் கருதப்படுகின்றார்கள்" என்ற வாசகம் இங்கு நோக்கப்படவேண்டியதாகும்.

வைத்தியர்கள் இறைவனுக்குச் சமமாகக் கருதப்படுகின்றார்கள் என்பதற்குள் இரண்டு பொருள் உண்டு. அதிலொன்று அவர்கள் உயிரைக் காப்பாற்றுபவர்கள். அதனால் இறைவன் என்ற உயர்ந்த சொற்பதத்திற்கு ஒப்புவிக்கப்படுகிறார்கள்.

மற்றையது அவர்கள் அன்புடன் நடந்துகொள்ள வேண்டும். இறைவன் எவ்வாறு அன்பு வடிவமானவன் என்று கூறப்படுகின்றதோ அந்த அன்பை வைத்தியர்களிடம் மக்கள் எதிர்பார்ப்பதனாலும் "இறைவன்" என்ற பதம் பொருத்தப்படுகின்றது.

ஆயினும் மருத்துவ உலகில் மருத்துவர்கள், தாதியர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கப்பட்ட சம்பவங்களும் நிறையவே உண்டு. அந்தமுறை நமது யாழ்ப்பாணத்து மண்ணில் இதுகாறும் இல்லாதிருந்த போதிலும், தற்போது யாழ்ப்பாணத்து டாக்டர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது ஒரு ஆரம்பமாக இருப்பினும், ஒரு பெரும் தடையின் உடைப்பு என்பதை உணர்ந்துகொண்டு நோயாளர்களின் கவனிப்பில் மேலும் ஒருபடி உயர்ந்த செயற்பாட்டை டாக்டர்கள், தாதியர்கள் மேற்கொள்வது அவர்களுக்கு எதிராக முன்வைக்கப்படவுள்ள வழக்குகளைத் தடுப்பதற்கான வழியாகும்.

# நரம்பியல் நிபுணர் டாக்டர் குணானந்தன் மீண்டும் கடமையாற்ற முன்வரவேண்டும்!

## யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் ரவிராஜ் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

டாக்டர் குணானந்தன் திறமையும் அனுபவமும் மிக்க நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் மேல்நாட்டிலும் படித்து, தொழில் செய்து அனுபவம் பெற்றவர்.யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஆறு வருட காலம் நரம்பியல் சத்திரசிகிச்சை விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.

நரம்பியல் துறையில் அவரது அறிவையும் ஆற்றலையும் அனைவரும் மதித்தனர். ஆறு ஆண்டு காலத்தின் பின் அவரது ஒப்பந்தம் பல்கலைக்கழகத்தால் புதுப்பிக்கப்படாததைத் தொடர்ந்து அவர் நீதிமன்றம் சென்ற பின் தான் பிரச்சினைகள் ஆரம்பமாகத் தொடங்கின இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் சத்திரசிகிச்சை கற்கைநெறி தடைப்பட்டது தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவா மேலும் கூறுகையில், யாழ். போதனா வைத்திசாலையில் பல் துறைசாா சத்திரசிகிச்சை நிபுணர்கள் பலர் இருக்கிறார்கள். பொது சத்திரசிகிச்சை, இருதய சிகிச்சை நிபுணர், புற்றுநோய் வைத்திய நிபுணர், மனநோய் வைத்திய நிபுணர் எனப் பல் துறைசார் நிபுணர்கள் தற்பொழுது பணியாற்றி வருகிறார்கள். அவர்களில் எவராவது நரம்பியல் சிகிச்சை நிபுணர் டாகடர் குணானந்தன் மீது குறைகாண எதுவித காரணமும் கிடையாது.

எனவே இன்றைய பிரச்சினையின் ஆணி வேர் என்ன என்பதை முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை விடுதிகள் நாலு இருக்கின்றன. இவற்றுள் நரம்பியல், முறிவு தறிவு, காது மூக்கு கண், இருதயம் ஆகிய பகுதிகள் சுகாதாரத் திணைக் களத்தின் கீழ்வருவன. பல்கலைக்கழகத்தில் சத்திரசிகிச்சைக் கற்கைக்கும் யாழ் .போதனா வைத்தியசாலைக்கும் எதுவித தொடர்பும் கிடையாது.

டாக்டர் குணானந்தன் யாழ். பல்கலைக்கழக பொது சத்திரசிகிச்சை கற்கைப்பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளராக ஒப்பந்த அடிப்படையில் ஆறு வருட காலம் கடமையாற்றியுள்ளார். இக்கால கட்டத்தில் இவர் நரம்பியல் சம்பந்தமானவற்றை கவனித்தாரேயன்றி இதர பொது சத்திர சிகிசசை கிளினிக் கவனிப்பு எதையும் செய்ததாகத் தெரியவிலலை. அவரது நோயாளர்களை அவரே பார்க்க முடியாது என்றால் பின் அவர்களை யார் பார்ப்பது.

யாழ். பல்கலைக்கழக பொது சத்திரசிகிச்சை யூனிற்றுக்கு இரண்டு கடமைகள் உண்டு. ஒன்று மருத்துவ பீட மாணவர்களுக்கு சத்திர சிகிச்சை பற்றி படிப்பிப்பது, நோயாளர்களைப் பார்த்து நோயின் தன்மை முதலிய பற்றி மாணவர்களுக்கு விளக்கமளிப்பது. இவை இரண்டும் ஒன்றோடென்று இணைபிரியாத தொடர்புடையன. தனக்குரிய வார்ட்டையும் பார்த்து அவருக்குரிய நோயாளர்களையும் பார்க்க வேண்டியது சிரேஷ்ட விரிவுரையாளரின் கடமையாகும்.

மருத்துவபீட மாணவர்களின் ஐந்து ஆண்டு கற்கைக் காலத்தில் இரண்டு கிழமைகள் தான் நரம்பியல் பற்றிய போதனை நடைபெறுகிறது. கடைசி ஆண்டில் அது ஒரு பாடம் அல்ல. 1985ஆம் ஆண்டு வரை சுகாதாரத் திணைக் களத்தின் கீழ் கடமையாற்றி வந்த இவர் திடீரென வெளிநாடு சென்றுவிட்டார். அவர் திரும்பிய பின் யாழ். பல்கலைக் கழகததில் சத்திரசிகிச்சை கற்கை நெறிக்கான சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

அவர் தனது கடமையை முறையாக செய்ய முற்படாததன் காரணமாகத்தான் இப்பிரச்சினை ஏற்பட்டு மருத்துவ பீட மாணவர்களின் சத்திரசிகிச்சை கற்கை நெறியும் ஸ்தம்பிதமடைந்தது.

சுகாதாரத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் கடமையாற்றும் எங்களுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் கடமையாற்ற வேண்டுமென எந்தவிதமான கடப்பாடும் கிடையாது.

மனிதாபிமான அடிப்படையிலும் மாணவர் நலன் அடிப்படையிலும் தான் இப்பிரச்சினையை அணுகுகிறோம்.

டாக்டர் குணானந்தன் தொடர்பான நீதிமன்றத் தீர்ப்பு இருக்கும் பொழுது நாங்கள் சட்டப்படி பல்கலைக்கழகத்தில் பணியாற்ற முடியாது இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சில நடவடிக்கைகளை எடுக்க முடியுமென பல்கலைக்கழக துணைவேந்தர் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலேயே நாங்கள் பல்கலைக கழக மருத்துவபீட மாணவர்களுக்கு சத்திரசிகிச்சை கற்கை நெறியை மேற்கொண்டு நடத்தத் தீர்மானித்திருக்கிறோம். இதுதொடர்பாகச் சட்ட பிரச்சினைகள் ஏதாவது எழக் கூடிய நிலை ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பேற்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரும், பல்கலைக்கழக துணைவேந்தரும் உறுதிமொழி வழங்கியதையடுத்தே நாங்கள் இந்த முடிவுக்கு வந்துள்ளோம் எனத் தெரிவித்தனர்.

டாக்டர் குணானந்தன் நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணராக கடமையாற்ற முன்வந்தால் இன்று கூட யாழ். போதனா வைத்தியசாலையில் அவர் கடமையாற்ற முடியும் என உறுதியளித்த டாகடர் ரவிரஜ், யாழ்.போதனா வைத்தியசாலையில் நரம்பியல் பிரிவு ஏற்கனவே இருப்பதாகவும் டாக்டர் குணானந்தன் அதைப் பொறுபபேற்று திறம்பட நடத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ்.போதனா வைத்தியசாலையில் இருதய சிகிச்சைக்கும், புற்றுநோய், மனநோய்க்கும் புதிதாக நிபுணத்துவம் பெற்ற வைத்திய நிபுணர்கள் நியமிக்கப்பட்டிருககிறார்கள் என்றும், வைத்தியசாலையின கட்டட வசதிகள் விஸ்தரிக்கப்படின இன்னும் பலதுறை சார் நிபுணர்கள இங்கு வநது கடமையாற்ற முடியுமெனவும் டாக்டர் ரவிராஜ் மேலும் தெரிவித்தார். (து)

## கால் நடை அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டம்

(கொழும்பு)

கால்நடை வளர்ப்பை ஐந்தாண்டுத் திட்டத்தினடிப்படையில் அபிவிருத்தி செய்யவும் சிறந்த இனப் பசுக்களை பண்ணையாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கமத்தொழில் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருக்கிறார்.

மேலும் தேசிய பால் உற்பத்தியில் கணிசமான பங்கை உள்ளூர் உற்பத்திகள் ஈடு செய்யும அதேநேரம், தமது ஐந்தாண்டுத் திட்டத்தின் இலக்கை இதன்மூலம் பூர்த்தி செய்து கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கால்நடை வளங்களை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் சிறந்த இனப் பசுக்களை தெரிவு செய்து கால்நடை வளர்ப்போருக்கு பெற்றுக்கொடுக்கவும் கால்நடை அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் பெருந்தொகையிலான கால்நடைகள் சுனாமிப் பேரலைகளால் அடித்துச் செல்லப்பட்டு அழிந்து போயுள்ளன.

இதன் காரணமாக கால்நடைப் பண்ணையாளர்கள் பெரும பாதிப்புகளை எதிர்நோக்கியுள்ளனர்.

எனினும் இவர்களுக்கான இழப்பீடுகளை வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனவும் உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கான அனர்த்த நட்டஈடுகளை பெற்றுக்கொடுக்க அமைச்சு முன்வர வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்புப் பண்ணையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (7-9)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மாகாண சேவையில் சிற்றூழியர்களை மாகாண பொது எழுதுநர் சேவை மற்றும் தட்டெழுத்தாளர் சேவையின் வகுப்பு 11 'ஆ' பிரிவிற்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை (2003) இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சை தொடர்பாக 04.03.2005 ஆம் திகதி வெளியிடப்பட்ட 1383ஆம் இலக்க பகுதி 1 தொகுதி (11அ) வர்த்தமானி அறிவித்தலுக்கும் சில திருத்தங்களுடன் வெளியிடப்பட்ட 1386 ஆம் இலக்க 24.03.2005ம் திகதிய வர்த்தமானியில் அறிவித்தலுக்கும் அமைவாகவே மேற்படி போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்ப படிவங்களை இரு பிரதிகளில் தயாரித்து 05.04.2005ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (சு)

## அனர்த்தம் குறித்து அறிவிக்க குழு ஒன்றை அமைக்க வேண்டும்

(கொழும்பு)

மீண்டும சுனாமி பீதி ஏற்பட்டதை அடுத்து ஆபத்து எச்சரிக்கை செய்வதற்கும் அதன் பின்னரான விவகாரங்களை கவனிக்கவுமென ஒரு பொறுப்புள்ள குழு ஒன்றை அமைக்க வேண்டுமென அரசு மற்றும் தனியார் ஊடக தலைமைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

சுனாமி எச்சரிக்கை வெளியிட்ட சில மணிநேரங்களில் பாராளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தில் கூடிய அனைவரும் இதுபற்றிப் பேசிக்கொண்டனர்.

ரூபவாஹினி தலைவர் எம்.சுபைர், லேக்ஹவுஸ் தலைவர் ஜனதாச பீரிஸ், ஐ.ரி.என்.தலைவர் நியூட்டன் குணரட்ன, ஊடக அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பீ.கனேகல,தகவல் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.டி.பியதாச, ரூபவாஹினிப் பணிப்பாளர் திஷாந்த ரணதுங்க, சிரச பணிப்பாளர் கிங்ஸ்லி ரட்நாயக்க, சுவர்ணவாஹினி பணிபபாளர் றோஸ்மன் சேனாரட்ன ஆகியோர் அங்கு பிரசன்னமாகியிருநதனர்.

அவர்கள் தெரிவித்தபடி மேற்படி அனர்த்தம் குறித்த அறிவித்தல் முதலில் ஊடகங்களாலேயே வெளியிடப்பட்டது. (க-6)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

கடமைகளைச் செய்தபடியே நூறு ஆண்டுகள் வாழ விரும்பு. கடமைகள் உன்னைப் பற்றுவதில்லை. உலகில் வாழ வேண்டும் அதற்கு வேலை செய்தாக வேண்டும். கடமைக்ளைச் செய்யாமல் யாரும் வாழ முடியாது. எந்த வேலையைச் செய்தாலும் அதற்கு விளைவு ஒன்று இருக்கும். அது நல்லதாகவோ கெட்டதாகவோ அல்லது இரண்டும் கலந்ததாகவே இருக்கலாம். ஆனால விளைவு ஒன்று நிச்சயம் இருந்தே தீரும்.

சுவாமி விவேகானந்தர்

## அரசாங்கத்தின் நிழல்யுத்தம்....

விடுதலைப்புலிகள் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' இதழின் மாசி, பங்குனி மாதத்துக்குரிய 122 ஆவது குரலிலேயே மேற்கண்ட வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் சிங்கள அரசாங்கம் தமக்கு எதிராக நிழல் யுத்தம் மொன்றினை நடாத்தி வருவதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக பொலநறுவைப் பகுதி திரைமறைவுப் போர்க்களமாகி விட்டதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கு சமாதானத்தில் நம்பிக்கையில்லை போர் மூலம் விடுதலைப்புலிகளை வென்று தமிழர்களை அழிக்க வேண்டும் என்பதே சிங்கள அரசின் நோக்கமாகும்.

இது தொடருமானால் நிஜயுத்தம ஒன்றின் பரிணாம வளர்ச்சியினை எவராலும் தடுக்க முடியாது. அரசாங்கத்தின் இனவாத நோக்கங்கள் வெளியில் செல்லக்கூடாது என்பதற்காகவே அண்மையில் வெளிநாட்டு ஊடகவியலாளருக்கு தணிக்கை கொண்டு வரப்பட்டது.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசாங்கம் இன்னும் சாதகமான போக்கினை வெளியிடவில்லை. இதன் காரணமாக இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையினைப் போன்றே இந்தப் பொதுக் கட்டமைப்பு விடயமும் கானல் நீர் ஆகும் விடயமாகிவிட்டதாக விடுதலைப்புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' இதழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-4)

## அமெரிக்க...

மீண்டும் அமெரிக்கா சென்றதும் வட - கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளை, வேதனைகளை அங்கு எடுத்துக் கூறுவதாக அவரிடம் உறுதியளித்தார். கிளிநொச்சிக்கு ஏ-9 வீதியூடாக சென்ற இருவரும் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும், அழிவுகளையும் பார்வையிடுவதற்காக முல்லைத்தீவுக்கும் விஜயம் செய்தனர்.

(இ-4)

## சாவகச்சேரியில்...

தீயிட்டுக் கொளுத்தினர்.

இதனையடுத்து படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையே வாய்த்தர்க்கம் முற்றி களேபரம் வெடித்தது. நிலைமையைக் கட்டுப்படுத்த கலகம் அடக்கும் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியதுடன் பொது மக்களை கண்டபாட்டில் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

நேற்று மாலைவரை அப்பகுதி எங்கும் பெரும் பரபரப்பும் அச்சமும் காணப்பட்டது.

தென்மராட்சியில் முக்கிய நகரப் பகுதிகள், சந்திகள் எங்கும் நேற்றிரவு வரை பெருமளவு படையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இராணுவச் சிப்பாயை தாம் கைது செய்திருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். பிரஸ்தாப சிப்பாய் இன்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படுவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

(இ-37-43-19-8)

## சாவு அறிவித்தல்

### இளையதம்பி ஜெகதீசமூர்த்தி (கிளி)

7-ம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி ஜெகதீசமூர்த்தி அவர்கள் 02.04.2005 அன்று காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற முன்னாள் மன்னார் மனோன்மணி விலாஸ் உரிமையாளர் இளையதம்பியின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை பார்வதியின் அன்பு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக்கணவரும் இந்திரகுமார்,ஜெயமலர், ஜெயமலா, ஜெசிந்தா, ரஜீவன், ஜனனி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்
ஜெ.புவனேஸ்வரி,
(மனைவி)

(C-1208)

## ஐ.ம.சு...

தலைவர்களின் தலையாய கடமை எனவும் இவ்வைபத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கூட்டரசின் முக்கிய பிரமுகர்களான அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க, ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, அமைச்சர் தினேஸ் குணவர்த்தன போன்றோர் கலந்துகொண்டனர்.

(இ-8)

## கொக்குவிலில்...

விழுந்தார்.

இதேவேளை வீதியால் மோட்டார் சைக்கிளுக்கு பின்னால் வந்துகொண்டிருந்த சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கு சொந்தமான ஹன்டர் வாகனம் சடுதியாக பிரஸ்தாபப் பெண்ணின் தலைப் பகுதி மீது ஏறியது. இதனால் ஸ்தலத்திலேயே பெண் துடிதுடித்துப் பலியானார்.

இதேவேளை மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞனும் சிறுகாயங்களுக்கு உள்ளானார்.

சம்பவ இடத்திற்கு நேரில் வருகை தந்த யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரம் சடலத்தைப் பார்வையிட்டதுடன் அதனை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(இ-19)


புதிய காட்சியறை திறப்புவிழா அழைப்பு

பேரன்புடையீர்!
நிகழும் மங்களகரமான தாரண வருடம் பங்குனித் திங்கள் 22 ஆம் நாள் (04.04.2005)
திங்கட்கிழமை பகல் 9.52 மணி தொடக்கம் 10.40 வரையுள்ள திருவோண நட்சத்திரமும்,
இடப இலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

சண் மாளிகையில்
35 ஆண்டுகளாக எம்மால் நடாத்தப்படும்

செல்லமுத்து புடவை மாளிகை

எனும் ஸ்தாபனத்தை புதுப்பொலிவுடன் ஆரம்பிக்க இருப்பதால் தாங்களும்
தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான வீதி,
நெல்லியடி.

இங்ஙனம்;
உரிமையாளரும், ஊழியர்களும்.

(C/1189)



நாதன்ஸ் சினிமா
யாழ்ப்பாணம்
29.03.2005 முதல்
சரத்குமார், நமிதா, வடிவேல் நடித்த
ஏய்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
விரைவில் எதிர்பாருங்கள்
ஜெய்ஆகாஷ் நடித்த
குருதேவா



நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜய், திரிஷா நடித்த

கில்லி
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)



மனோகரா சினிமா
யாழ்ப்பாணம்
பார்த்தீபன், காவேரி,
மாஸ்டர் அஸ்வின் நடித்த
கண்ணாடிப் பூக்கள்

கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (நீலஸ்)




10500/=

புதுவருடத்தினை முன்னிட்டு
அதிரடி விலைக்கழிவில்


13500/=

மொபிரெல், டயலொக் மேசைத் தொலைபேசிகள் இணைப்புடன் எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்
உத்தரவாதம் உண்டு
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்

தொடர்புகளுக்கு
பவர் செலூலர் ரேடிங் கம்பனி

OFFICE: 185, 1 ஆம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
SHOP: 205/01 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இச்சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டுமே
Tel/Fax: 021 - 222 - 7070
Mobile 0712 - 399220, 0714 - 182500, 0714 - 182501
கையடக்கத் தொலைபேசிகள் லொக் உடைத்துக் கொடுக்கப்படும்



EXPOAIR
Your friend in the skies...
யாழ்  கொழும்பு
தினசரி விமான சேவை
எக்ஸ்போ எயார்
T.P: 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: jaffna @ expoavi.com, reservations @ expoavi. com,
வானத்தில் உங்கள் நண்பன்...


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.